
# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



16-11-69

விலை 20 காசு

# ?! வினா-விடை

**எம். சி. ரத்தினம், மாச்சம்பாளையம்.**

அறிஞர் அண்ணா அவர்கள், கழகத்தைக் குடும்பமாக வளரச் செய்துவிட்டுச் சென்ற பிறகு, அண்ணன் முத்துராமன் மட்டும், நண்பா என்று ஏன் அழைக்கிறார்? இனி அவர், சகோதரர்களே என்று அழைப்பாரா?

அவ்வாறு அழைப்பது முறையானதுதான். ஆனால் அவ்வாறுவிளிக்கும்போது, அண்ணா என்றோ, தம்பி என்றோ எழுத வேண்டியேற்படும். நம்மையெல்லாம் தம்பி! என்றழைக்கும் உரிமை அண்ணா ஒருவருக்குத்தான். அதனாலேயே, நண்பா என்று எழுதவேண்டி ஏற்படுகிறது.

**து. தண்டபாணி, அறந்தாங்கி.**

மாணவர் போராட்டங்கள் மீண்டும் உயிரூட்டம் பெறுகின்றனவா?

உயிரூட்டம் பெறக்கூடாது என்பதே நமது வேட்கையாகும். உயிரூட்டச் செய்வதாலேயே தம் பிழைப்பை நடத்தலாம் என்று சில அரசியல் கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு, களத்திலிறங்கிஇருக்கின்றனவே, என்ன செய்வது? கல்லூரியில் அல்லது பாடசாலையில் இருக்கும்வரையில் தான் "மாணவர்" என்று கருதப்படவும், வெளியில் இருக்கும் போது அவர்கள் எல்லோரையும் போன்றே "பொதுமக்கள்" என்ற கணக்குக் குரியவர்கள்தான் என்று எடுத்துக்காட்டவும் எந்த அரசியல் கட்சியும், அரசியல் தலைவர்களும் முன் வருவதில்லையே! விளைவுகளை அனுபவிக்கவேண்டாமா?

**கே. சுந்தரமூர்த்தி, விளாகம்.**

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியும் உடைந்து போகுமா?

நீங்கள் எந்த உலகத்திலிருக்கிறீர்கள்? சுப்பிரமணியம் தலைவர் பதவியை வீசியெறிந்த அன்றே அது உடைந்து, சிதறி விட்டதே!

**ஜி. பார்த்தி, சென்னை.**

பாராளுமன்றத்துக்கான மறு தேர்தல், நடைபெறும் வாய்ப்பு இருக்கிறதா?

நடைபெறாது என்று தற்காலிகமாக மட்டும் நம்புவோமாக! தேர்தல் துறை, தன் கடமையைச் செய்ய முனைந்திருக்கிறது. அதைக்கொண்டு அப்படிக் கணித்து விடக்கூடாது.

**இரா. தெய்வமணி, சிவகங்கை.**

கடமைக்குப் பின் உரிமையா? உரிமைக்குப் பின் கடமையா?

எதற்குப் பின்னும் எதுவும் இல்லை. கடமையும், உரிமையும் நாணயம் ஒன்றின் இருபக்கங்களைப் போன்றதாகும். கடமை உணர்வில் உரிமை வேட்கையுமிருக்க வேண்டும்; உரிமை வேட்கையில் கடமை உணர்வுமிருக்க வேண்டும். ஒன்றைவிட்டு ஒன்று உருப்பெற முடியாது. கடமை மட்டுமே என்று செயல்பட முனைந்தால், ஒருவகை அடிமைத்தனம் தோன்றிவிடும். உரிமை மட்டுமே என்று செயல்பட நினைத்தால் ஒருவித மூர்க்கத்தனம் உண்டாகிவிடும்.

**பி. ஜோதீஸ்வரன், பொள்ளாச்சி.**

தஞ்சைமாவட்டத்தில் ஒரு விவசாயியை, வீட்டுக்குள் தூணில் கட்டிவைத்து, வீட்டுக்குத் தீ வைத்த கம்யூனிஸ்டுகளின் கருத்து எதுவாக இருக்கும்?

விவசாயப் பெருங்குடி மக்களிடையே சோஷலிசக் கொள்கையைப் புகுத்தும் வழிமுறை இதுதான் என்பதாக இருக்குமோ!

**செ. ரவீந்திரன், மதுரை.**

மேற்கு வங்க முதலமைச்சரின் நிலைமை பரிதாபகரமாகவா இருக்கிறது?

இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறாரே! பதின்மூன்று கட்சிகள் தனது கைகளையும், சிந்தனையையும் கட்டிவைத்திருக்கின்றன என்பதை எவ்வளவு வேதனையுடன் கூறி இருக்கிறார் கவனித்தீர்களா?

**கே. பக்தவத்சலம், சேலம்**

பெங்களூர் கூட்டத்துக்கு முந்திய நிலையை காங்கிரசில் உண்டாக்கவேண்டும் என்று சிண்டிகேட் தரப்பில் கூறப்பட்டது எப்படி இருக்கிறது?

விலக்கிய அமைச்சர்களையெல்லாம் மீண்டும் அரசில் சேர்த்துக்கொண்டால் தாங்களும் விலக்கிய மூவரையும் செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளத் தயார் என்பதுதான் பெங்களூருக்கு முந்தியநிலை. விலக்கிய அமைச்சர்களை மீண்டும் சேர்த்துக்கொண்டால்மட்டும், சி. எஸ். முதலான மூவர்மீதும் கூறப்பட்ட குற்றங்கள், பெருமைகளாகிவிடும் என்று கருதிய சிண்டிகேட்டின் நிலை வெட்கப்படத் தக்கதாகும்.

**எம். தெட்சணாமூர்த்தி, காஞ்சிபுரம்.**

உலகில் கடனே இல்லாதநாடு ஏதேனுமிருக்கிறதா?

உலகில், மற்ற நாடுகளைவிட அதிகக் கடன் சுமையுள்ள நாடு இந்தியாதான் என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது. அதுபோலவே, உள்நாட்டிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, கடனேவாங்காதநாடு நாங்கள்தான் என்று சீனா அறிவித்திருக்கிறது.

**தி. சந்தானம், திருச்சி.**

ஊராட்சிகள், நகராட்சிகள், திரைப்பட அரங்குகளை நடத்துவது பற்றி முதல்வர் கூறி இருக்கிறாரே, தங்கள் கருத்தென்ன?

முதல்வரே விளக்கமாகத் தானேகூறி இருக்கிறார்! திரைப்படஅரங்குகளை நாட்டுடைமையாக்குவது பற்றி தி.மு.க. அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. வாய்ப்பு, வசதியுள்ள இடங்களில் புதிதாகவும் கட்டிக் கொள்ளலாம்—இல்லாத இடங்களில், நாட்டுடைமை ஆக்கிக் கொள்ளலாம்!

---

முகப்பில்:

**14–11–69ல் நிலவுப் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க விண்வெளி வீரர்கள்: சார்லஸ் கான்ராடு, ரிச்சர்டு கார்டன், ஆலன் பீன்.**

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 16—11—69 | இதழ் 18

## 'சிண்டிகேட்'டின் சிறுமைத்தனம்!

அதிபர் பதவிக்கு வந்த பிறகு, எத்தனை வேகமாக உலகத்தின் கவனத்துக்கு வந்தாரோ, அதனைவிட வேகமாக, தன்கட்சியின் தலைமையால் பதவியிலிருந்து தூக்கி யெறியப்பட்ட சோவியத் நாட்டைச் சேர்ந்த குருஷேவினால்கூட இவ்வளவு பெரிய பரபரப்பை உண்டாக்க முடியவில்லை. இந்தியத் துணைக்கண்டம் இன்றைக்கு மிகப் பெரிய பரபரப்புக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறது,

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எடுத்துக்காட்டி இருப்பதைப்போல, காங்கிரசுக்கட்சி, தற்கொலை செய்துகொள்ளும் நிலையை அடைந்ததனை யாராலும் இறுதிவரையிலும் தடுக்கமுடியாமலே போய் விட்டிருக்கிறது.

பிரதமர் இந்திரா காந்தி அவர்களை, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்தும்கூட விலக்கி விட்டதாகக் காரியக்கமிட்டி அறிவித்திருப்பதானது, துணிகரமான சர்வாதிகார நடைமுறை என்று பேரறிவாளர்கள் பலரும் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

பிரதமருக்கு எதிராகக் காரியக் கமிட்டி இதுவரையில் எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தாலும், அவற்றையெல்லாம்விட, இந்தப் புதிய தீர்மானம், நாட்டவரால் புலத்த கண்டனத்துக்காளாகி இருக்கிறது.

காங்கிரசுக்கட்சியின் நடைமுறை விதிகளின்படி, கட்சியிலிருந்து விலக்கப்பட்டதும், பிரதமர், தமது பதவிப்பொறுப்பிலிருந்தும் விலகிவிடவேண்டும் என்று ஒரு சாராரும், விலக்கிய நடைமுறையே விதிகளுக்குப் பொருந்தாது; எனவே பிரதமர் பதவி விலகவேண்டியதில்லையென்று ஒரு சாராரும் கருத்தறிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எது எப்படியாயினும், காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவினால், இவ்வளவு பெரிய துரோகத்தை ஒரு தேசியப் பரம்பரையின் குடும்பத்துக்கு இழைக்க எப்படி இயன்றது என்றே அரசியல் விமர்சகர்கள் ஐயுறுகிறார்கள்.

இத்தலையங்கம் எழுதப்பட்டுக்கொண்டிருக்கிற இன்று, பிரதமர் கூட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் காங்கிரசுக்கட்சியினர் உட்பட 330க்கும் அதிகமானோர், பிரதமரின் தலைமைக்கு ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த ஆதரவு ஒரு தனி மனிதருக்கு அல்லவென்றும், சில முற்போக்குக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்குமானதாகும் என்றும் அவர்கள் தெரிவித்திருப்பது பொருள் பொதிந்ததாகும்.

இதுவே உண்மை நிலையென்று ஆகுமானால் பிரதமர், தொடர்ந்து காங்கிரசுக் கட்சியின் பிரதமராகவே பதவியில் நீடிப்பதை, காங்கிரசுக் கட்சியின் தீர்மானத்தால் தடுத்து நிறுத்திவிட முடியாது. அல்லது நாடாளுமன்ற காங்கிரசின் பெரும்பான்மை, புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியுமானால், அப்போதும் காங்கிரசின் சார்பில் இன்னொர் பிரதமர் வருவதற்கு வழி இல்லை. காரணம், பிரதமரை ஆதரிப்போர், காங்கிரசுக்கு எதிராகத்தான் செயல்படுவர் என்று எதிர்ப்பார்ப்பதேயாகும் நாடாளுமன்றகாங்கிரசுக்குள் ஏற்படும். பிளவு, பெரும்பான்மை பலத்தால் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் தடுக்கக்கூடும்.

அதே வேளையில் பிரதமர் இந்திராவும் தன் ஆதரவு உறுப்பினர்களோடும், எதிர்க்கட்சிகளின் சில உறுப்பினர்களது ஆதரவோடும் தொடர்ந்து பதவியிலிருக்க வாய்ப்புண்டு.

இந்திரா ஆதரவாளர் போக, எஞ்சிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன், பிரதமரை எதிர்க்கும் ஜனசங்கம், சுதந்திரா போன்ற சில கட்சிகளின் ஆதரவோடும் அரசு அமைக்க, ஆத்திர உணர்ச்சி காரணமாகக்கூட சிண்டிகேட் தரப்பு முனையாது; முனைந்தாலும் இயலாது.

எனவே, காங்கிரசுக் கட்சியின் இப்புதிய முடிவு, நேருவின் குமாரிக்கு ஒரு களங்கத்தையுண்டாக்க மட்டுமே பயன்பட முடியுமே அல்லாமல், சிண்டிகேட் தரப்புவிரும்பிய—எதிர்பார்த்த பலனை அளிக்காதுஎன்று, இன்றுவரையிலான செய்திகளின்படி மட்டும்நம்பலாம்.

## வெட்கப்பட மாட்டார்கள்!

குடும்பக் கார்டுகள் அமுலில் உள்ள பகுதிகளில், நவம்பர் 15-ம் நாள் முதல் அதிக அளவு அரிசி கொடுக்க உத்திரவிட்டிருப்பதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தெரிவித்திருப்பது மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும். இப்போது இந்தப் பகுதிகளில் தரப்படும் அளவைவிட, 200 கிராம் அதிகமாகக் கொடுக்கக் கூடிய அளவுக்கு, உணவுப்பண்ட உற்பத்தியில் சிறிது முன்னேற்றம் கண்டிருப்பதே காரணம் என்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அத்துடன், முதல் போக சாகுபடியில் பல பகுதிகளில் அறுவடையாகி, நெல், அரிசி மார்க்கெட்டு வந்திருப்பதும் காரணம் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்நிலையில், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழகக் கிளை, உணவுப் போராட்டம் தொடங்கி இருக்கிறது. தம் போராட்டம் காரணமாகவே அதிக அளவு அரிசி கிடைத்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள அவர்கள் வெட்கப்படப் போவதில்லை. ஆனால் ஊரறியுமே, இது அறுவடை காலம் என்பதை!

## வருந்துகிறோம்.

கழகத் தலைவரும், முன்னணிப் பேச்சாளரும், நாடாளு மன்ற தி. மு. க. தலைவருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்களது துணைவியார் வெற்றிச் செல்வி அம்மையார் அவர்கள் தம் 43-ம் வயதில் காலமான செய்தியறிந்து மிகுந்த துயருறுகிறோம். திருமதி வெற்றிச்செல்வி அம்மையார் அவர்கள், பொதுத் தொண்டில் ஆர்வமிக்கவரா யிருந்தார்கள். இந்த இழப்பு பேராசிரியருக்கு ஈடு செய்ய முடியாததாகும். பேராசிரியருடனும், அவர்தம் குடும்பத்துடனும் துக்கத்தில் நாமும் பங்குகொள்கிறோம்.

## செரியன் மறைவு

மகாராட்டிர மாநில கவர்னராக விருந்த பி. வி. செரியன், சென்ற கிழமை மாரடைப்புக் காரணமாக தம் 76—வது வயதில் மரண மடைந்த செய்தி, துணைக் கண்டம் முழுவதையும் துயரத்திலாழ்த்தி இருக்கிறது. திரு. செரியன் அவர்கள் தமிழ் நாட்டைச் சார்ந்தவர் என்பதுடன், தமிழகத்தின் உயர்வுக்கும் சீரிய தொண்

(16-ம் பக்கம் பார்க்க)




[3]

அவையினைக் கூட்டி அரசன், ஒவ்வொருவராகக் குறைபாடுகளைக் கூறலாம் என்றவுடன், தொண்டு கிழவர் ஒருவர் அரசரை அணுகி, "அரசே, காலப் போக்கு என் நெஞ்சை வருத்துகிறது" என்ருர். அது கேட்ட குலோத்துங்கன், காலப்போக்கில் காணும் குறைகளை, விளக்கமாகக் கூறும்படிக் கேட்டான்.

முதியோர், "அரசே! இரண்டோர் நாட்களுக்கு முன்பு இங்கோர் ஆரியப் பண்டிதன் தனது கலை பற்றிப் பேசிடக் கேட்டீர். அவன் போன்ருேர் செய்து வைத்த பிரசாரம், காலப்போக்கை கெடுத்து விட்டது என்பதே என் போன்றவர்களின் அபிப்பிராயம். தமிழகத்திற்கு ஆரியம் புதியதோர் ஆபத்தோ என்று நாங்கள் அஞ்சுகிருேம். அவ்வளவே என் குறை" என்றுரைத்தார். மன்னன் சற்றுநேரம் யோசித்துவிட்டு "பெரியவரே! அஞ்சாதீர்! அவர்களின் கலை, நீர்மேல் எண்ணெய்போல் தமிழகத்திலே மிதப்பதை நானும் கண்டேன். நாளாவட்டத்தில் அதை நீக்குவோம். இது உறுதி. ஆரியர், தமிழகத்திலே தமது ஆதிக்கத்தைப் புகுத்தார்; புகுத்த முயன்ருல், கனக விசயர் கண்ட கதியே காண்பர்" என்று உறுதி கூறித் தேற்றினுன்.

"மன்னர் மன்னவ! சிற்றரசர்கள் கப்பம் அனுப்பியுள்ளனர். கொலு மண்டபத்திற்கு அவர்களை அனுப்பவோ?" என்று வீரமணி, மன்னனைக் கேட்க, மன்னன் "ஆம்" என்றுரைத்து விட்டுக் கொலுமண்டபம் சென்று அமர்ந்தான். குலோத்துங்கமன்னருக்குத் திறையனுப்பியமன்னர்கள் பலப்பலர். கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், கோசலர், கங்கர், கராளர், கடம்பர், துரும்பர், வங்கர், மராடர், விராடர். கொங்கணர் முதலிய பல்வேறு வட்டார மன்னர்கள் பொன்னும், மணியும், வேழமும், புரவியும், ஆரமும் பிறவுமாக, பலவகை இறைப் பொருளை மன்னன்முன் குவித்துக் கும்பிட்டு ஒருபுற மொதுங்கி நின்றனர். கருணாகரத் தொண்டைமான், தூதுவர்கள் கப்பம் செலுத்திக் கொண்டிருக்கும்போதே, சற்றுச் சீற்றத்துடன் காணப்பட்டார். வீரமணியும் மற்றும் சில படைத் தலைவர்களும், மெல்ல ஏதோ பேசிக்கொண்டே மன்னனையும், தொண்டைமானையும் மாறி மாறிப் பார்த்தனர். மன்னன் கப்பம் செலுத்தியோரை ஒருபுறம் நிறுத்தி, அவரவர் ஊர் வளம் விசாரித்து, 'நம்மால் உமது மன்னனுக்கு ஏதேனும் உதவி தேவை எனில் கூசாது கூறுமின்' என்று கேட்டு உபசரித்தான். 'அரசர்க்கரசே! உமது ஆணையே எமது அரசுகளை எல்லாம் அரண்போல் காத்து நிற்கிறது. 'குறைவேதுமில்லை' என்றனர் திறை கொணர்ந்தோர்.

"கவிதைகள், காவியம், உயர்கலைகள், சிற்பம் முதலிய விசேடங்கள் உமது நாடுகளிலே உள்ளனவோ? நாமறியக் கூறுமின்' என்று மன்னன் கேட்க, அவரவர்கள் தத்தம் நாட்டிலே உள்ள நயங்களை உரைத்து நின்றனர். இவை ஒன்றையும் தொண்டைமான் கவனிக்கவில்லை. அதுசமயம் தொண்டைமான், சோழ மன்னனின் படைபலக் கணக்கிலே கவனம் செலுத்தியிருந்தான், காரணத்தோடு!

மன்னன் திடீரென்று, தொண்டைமானை நோக்கி, "திறை செலுத்தத் தவறியவர் எவரேனுமுண்டோ?" என்று கேட்டான். கொலு மண்டபம் நிசப்தமாய்விட்டது. கோபக்குரலுடன், "வேந்தே!

## சென்ற இதழ்களில்......!

நாட்டியக் கலைக்கே அரசியாக விளங்கிய நடனராணி, சோழன் குலோத்துங்க மன்னனது ஒரே மகளான அம்மங்கைத் தேவியின் உயிர்த்தோழி. அரசரின் முழு அபிமானத்துக்கும் உரிய படைவீரன் வீரமணி, நடனராணியின் கண் அசைவில், இடைநெளிவில், அங்க அடிப்பில் அகிலத்தையே மறந்துகிடக்கிறான்.

காதலர்கள் தங்கள் களியாட்டத்துக்காக அரண்மனைப் பூந்தோட்டத்தையே பயன் படுத்திக்கொண்டனர். தோட்டக் காவல்காரனோ, தோட்டத்தைக் காப்பதைவிட, அவர்கள் ஆட்டத்தைக் காக்கும் பாதுகாப்புவேலியாக மாறிவிட்டிருக்கிறான்.

இளவரசி அம்மங்கைத்தேவி அரண்மனைத் தோட்டத்தில் ஆடிப்பாடி குதூகளித்துக்கொண்டிருக்கும்போது நடனராணியின் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்துவிடுகிறாள் நடனராணி கேலிக்கு ஆளாகிறாள்.

வீரமணி, தான் மன்னருடன் வேட்டையாடச் செல்லவேண்டியிருப்பதுபற்றித் தன் காதலியிடம் கூறி பிரியமுடியாமல் பிரிகிறான். இரவே வந்து விடுவதாகக்கூறி.

வேட்டைக்குச் சென்ற வேந்தன், உறையூரைவிட்டு, காஞ்சிக்குச் செல்லப் பணிக்கிறான். தன் வருகையை முன்னறிவிப்புக் கொடுக்குமாறு வீரமணிக்கு உத்திரவிடுகிறான்.

தன் காதலிக்காகவே வேட்டையின்போது பிடித்துவைத்திருந்த ஒரு பஞ்சவர்ணக் கிளியை, செவிட்டு வீரனிடம் கொடுத்து காதலியிடம் சேர்ப்பிக்கக் கூறுகிறான். சரியாகக் காதில் விழாததால் மீண்டும். யாரிடம்? என்கிறான். நான் காதலிக்கும் அம் மங்கையை அறியாயோ? என்கிறான் வீரமணி. அம் மங்கை, என்பதனை தவருக அம்மங்கைத் தேவி என்றெண்ணிக்கொண்டு தலையசைக்கிறான் செவிடன்.

மன்னர் பட்டத்தரசியையும் கச்சிக்குவரப் பணித்து, அந்தச் செவிடனையே அனுப்புகிறார். வீரமணி கச்சி புறப்படுகிறான். செவிட்டு மருதன் உறையூருக்குப் புறப்படுகிறான். நடனராணியின் மனம், வேட்டையாடச்சென்ற வீரமணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.' வீரமணியோ, புரவியேறிப் போய்க்கொண்டிருந்தாலும், உள்ளத்தை மட்டும் உறையூருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான். காதலர்கள் என்றால் அப்படித்தானே!

உறையூரை அடைந்த செவிட்டு மருதன், நடனராணியின் முன்னிலையிலும் ஆரியப் பெண் கங்காபாலாவின் முன்னிலையிலும் பஞ்சவர்ணக் கிளியை அம்மங்கையிடம் சேர்ப்பித்துவிட்டு அரசியாரை, அரசர் கச்சி வரப் பணித்ததனைக் கூறிப் போகிறான்.

அரசகுமாரியின் அபிமானத்தைப் பெறவும், நடனராணியின் செல்வாக்கைச் சீரழிக்கவும் சரியான வாய்ப்புக் கிடைத்ததென எண்ணி மகிழ்கிறாள் கங்கா. பஞ்சவர்ணக் கிளியை வைத்தே பாவையர்க் கிடையே பிளவுண்டாக்கும் திட்டத்தைத் தீட்டுகிறாள். சதியை உணர்ந்து நடனராணி, ஆரியப் பெண்ணின் நாவை அடக்குகிறாள்.

அரசியாரும் சிறு படையுடன் கச்சிக்குச் செல்கிறார். அம்மங்கையும் கூடச் செல்லாததால் ஏமாற்றமடைகிறாள் நடனம். கச்சியை அடைந்த மன்னருக்கு கோலாகலமான வரவேற்புக் கிடைக்கிறது. ஆடல் பாடல்கள் நடைபெறுகின்றன. களியாட்டங்களுக்குப் பிறகு, அரசர் அவையைக் கூட்டி, நாட்டு வளம் கேட்டு, குறைகளையும் கூறும்படிக் கேட்கிறார்.

கலிங்கநாட்டு மன்னன் அனந்தவர்மன் மட்டுமே கப்பம் செலுத்தவில்லை" என்று திருமந்திர ஓலைநாயகன் கூறினான். குலோத்துங்கன் முகத்திலே குறுநகை பிறந்தது! அதன் பொருள் என்ன என்பதை அங்கிருந்தோர் அறிவர். சபை கலைக்கப்பட்டது. தொண்டைமானின் விழியும் விஷயத்தை வெளிப்படுத்தி விட்டது! மன்னனின் புன்முறுவல் இட்ட கட்டளை, "தூக்குவீர் கத்தியை!" என்பதே! உறைகளிலிருந்து வாளை உருவிட இலட்சக்கணக்கான வீரர்கள் 'தயார்! தயார்!' என்றனர்.

கலிங்க நாட்டு மன்னன், கெடுமதி இருந்தவாறென்னே! தமிழக முழுவதும் தலைவணங்கி நிற்கும் தன்மையினனான நம் மன்னர் மன்னனின் மாண்புகளை அறியாது போயினன். மடத்தனமிக்க மமதை கொண்டான். மண்ணில் அவன் குருதி கொட்டுமென்பதுறுதி! குலோத்துங்கனை எதிர்த்து நின்ற எவரேனும் தோற்காதிருந்த துண்டோ? வேங்கை சீறிடின் மான் கூட்டம் பிழைக்குமோ? மூண்டுவிடும் பெரும் நெருப்பிலே பஞ்சு பிழைப்பதுண்டோ? கலிங்கக் காவலனின் ஆணவமெனும் வெண்ணை நமது அரசனின் சினமெனும் கனல்பட்டு உருகிவிடாதோ! ஒரு வேந்தனின் ஆணவத்தின் பயனாக, பாபம், அந்தமக்கள் சொல்லொணுக்கஷ்டமனுபவிக்கப் போகிறார்கள். அவர்களின் நகரங்கள் நாசமாக்கப்படும்! வயல்கள் வெளிகளாகும்! மாளிகைகள் மண் மேடுகளாகும்! இந்தக் கலிங்க மன்னன் எவ்வளவு பித்தன்! ஏனோ! வம்பை விலைகொடுத்து வாங்குகிறான். குலோத்துங்கக் கொற்றவனின் தோள் வலிமை அறியாதவன்போல், அகந்தைக்கொண்டு, தான் ரட்சிக்கவேண்டிய மக்களை இம்சைக்கு உள்ளாக்கத் துணிகிறான் என்று காஞ்சியில் மன்னனுடன் வந்திருந்த படையினரிற் சிலர் பேச, மற்றவர் "போர் வந்தேவிட்டதுபோல பேசுகிறீரே! மன்னனின் ஓலை போனதும், கலிங்கன் குளிரும் காய்ச்சலும் கொண்டு திறையுடன் இவண் போந்து "திக்கெட்டும் புகழ் பரப்பிய தீரனே! தமிழகத்தின் ஒளியே! மன்னர் மன்னவா! என்னை மன்னித்தருள்க என்று வணங்கிவிட்டாலோ!" என்று வினவினர், நான் கலிங்கநாட்டைக் கண்டிருக்கிறேன். மன்னனின் குணத்தை மக்கள் கூறக் கேட்டிருக்கிறேன். மமதையே அந்த மன்னனுக்குத் தோழன், எனவே அவன் மன்னிப்புக் கோரான்! போருக்கே எழுவான்" என்று நரைத் தலையும் வடுநிரம்பிய உடலமும் கொண்ட ஒரு வயோதிக வீரர் கூறக் கேட்ட மற்றவர் "அங்ஙனமாயின் நமக்குப் பெருவிருந்துதான். சந்தேகமில்லை" என்று கூறி, ஆரவாரித்து ஆயுதங்களைத் தூக்கிச் சுழற்றி ஆடினர்.

மன்னன் குலோத்துங்கன், படைத் தலைவன் தொண்டைமானுடன், தனியறையிலே உரையாடிக் கொண்டிருந்தான். கவலை கொண்ட முகத்தினனாக வீரமணி, அந்த அறையின் வாயிற்படியிலே காவல் புரிந்து நின்றான்.

"மன்னவா! இந்தப் போருக்காகத் தாங்கள் நேராகக் களம் புக வேண்டுமா? நான் செல்வேன் சேனைகளுடன். வெல்வேன் கலிங்க வேந்தனை. உமது கட்டளை எனும் வில்லுக்கு நான் அம்பு! என்னை எய்தால் போதாதோ?" என்று தொண்டைமான் கூறிடக் கேட்டு புன்முறுவல் பூத்த மன்னன் அங்ஙனமே யாகுக! அஞ்சா நெஞ்சரே, அன்பரே, தேவையான படைபலத்தோடு சென்று வென்று வாரும். கலிங்கனின் காதுகளில் கங்கைக் கரைக்காரரின் கூச்சலே கேட்கிறது. அதனாலேயே அவன், புயலில் குதிக்கத் துணிந்துவிட்டான். அன்றோர் நாள். ஆரிய மன்னர்களைச் சேரன் செங்குட்டுவன் வென்று, சிரமீதில் கல்லேற்றி வந்த சேதியை கலிங்கன் மறந்தான் போலும்!" என்று மன்னன் கூறினான்.



"உறையூருக்கு ஓலை அனுப்பிவிடுகிறேன். வீரமணி குதிரைப் படைக்குத் தலைமை தாங்குவான். எனது தமையனுரிடம் கரிப் படையின் பொறுப்பிருக்கும். தரைப் படைக்குத் தலைமை நானே கொள்கிறேன்" என்று தொண்டைமான் போர் முறையை விவரிக்க, மன்னன் உலவியபடி, "சேனைத் தலைவரே! உமது யுக்தம்போல் செய்யும். ஆனுல் ஒன்று கலிங்க நாடு மலையரண் கொண்டது. கலிங்க மன்னனின் மமதைக்குக் காரணமும் அதுவேதான்! எனவே மலையரணைத் தூளாக்க, யானைப் படையைச் சற்று அதிகமாகவே கொண்டு செல்லும். மேலும், கலிங்கநாட்டின்மீது, நமது படைகள் தரை மார்க்கமாகப் பாய்வதோடு கடல் மார்க்கமாகவும் நமது சேனைகள் சென்று முற்றுகையிட வேண்டுமாகையால், நமது கப்பற் படையும் தரைப் படை கிளம்பும்போது கிளம்பட்டும். கலிங்கம் அழியட்டும்" என்று கூறினுன்.

"தங்கள் ஆணையை நிறைவேற்றுவேன்" என்று கூறிப் பணிந்து நின்ருன் தொண்டைமான். இரு வீரரின் முகங்களும் கோபத்தால் சிவந்திருந்தன. முத்துப்போல் அரும்பிய வியர்வையைத் துடைக்கவும் மனமின்றி மன்னன் நமது படைகளை வெளியிலே கூட்டு, நான் சில கூறல் வேண்டும்" என்ருன்.

சித்திர மண்டபத்தை அடுத்த வெளியிலே படைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. தொண்டைமான் வீரமணியை உடன் அழைத்துக்கொண்டு குதிரை மீதேறி, அணிவகுப்பை ஒழுங்கு பார்த்தான். படை முழுவதிலும் ஜொலிக்கும் முகங்களும், அவற்றுடன் போட்டியிடும் ஒளிவீசும் ஆயுதங்களுமாக இருந்தன! "இந்த வடு இன்ன களத்திலே உண்டாயிற்று. இன்ன போரிலே இன்ன விதமான வெற்றி நான் கண்டேன்" என்று பழங்கதை பேசி நின்றனர் படை வீரர்கள். வீரமணியின் வாழ்க்கையில் புதியதோர் நிலைமை, அதாவது குதிரைப் படைக்குத் தலைமை தாங்கும் பேறு கிடைத்ததால், அவன் மிக்க மகிழ்வுடனே விளங்கினுன். காதலியைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற கவலையையும் மறந்தான்! புதுத் தலைவரைப் பெற்ற குதிரைப் படை வீரர்கள் களித்தனர். குதிரைகள் களம் புகும் காலம் அதுவெனக் கண்டுகொண்டு கால்களைத் தட்டி நின்றன! 'கலிங்க வீரர்களின் மார்புகளிலே இந்தக் குளம்புகள் தாண்டவமாடும்' எனக் கூறிக் குதிரையை வீரர்கள் தட்டிக் கொடுத்தனர். குன்றுகள் பல வரிசையாக அடுக்கியது போன்ற காட்சி தந்தன கரிவரிசை! அவைகளின் ஆரவாரம் கடலொலி போன்றிருந்தது.

பேரிகை ஒலித்தது; பேச்சு நின்றது! மன்னவன் ஓர் யானை மீதமர்ந்து, படை வரிசை நடுவே வந்து நின்ருன்! புன்னகை பூத்தான்! வீரர்களின் முகமெலாம் மலர்ந்தன! "மன்னர் மன்னவன் வாழ்க! தமிழ் மாநிலம் வாழ்க,'! என்று வீரர்கள் முழக்கம் செய்தனர்!

"தமிழ் மாநிலம் வாழ்க! உண்மை உரை அது, வீரர்காள்! தமிழ் மாநிலம் வாழ, அதன் கீர்த்தி பரவ, உங்கள் குருதியைப் பாய்ச்ச வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளவே இன்று இங்கு உம்மை அழைத்தேன். மண், பெண், பொன் எனும் மூன்றுக்கும் மாநிலத்திலே போர் மூளுவதுண்டு. நாம், மண் வேண்டியோ, பெண் வேண்டியோ, பொன் கோரியோ கலிங்க நாட்டின் மீது போர் தொடுக்கவில்லை. சோழவள நாடு சோறுடைத்து! நமது மணி மாடங்களிலே தேனிடையூறிச் செம்பவள இதழ்ச் சேயிழையார் தத்தமது காதலருடன் தென்றலையும் திங்களையும் வென்று வாழ்கின்றனர். மண், பெண், பொன் எனும் மூன்றிற்கல்ல இப்போர்; மானத்திற்கு! ஆம்! தமிழகத்தின் எல்லையிலே உள்ள ஓர் கொல்லை கலிங்கம்! புன்னகைப் பூந்தோட்டமல்ல! செந்தமிழ் செழிக்கும் சோலையுமல்ல! ஆனுல், கலிங்கன் கப்பம் தர மறுக்கிருன்! என்உயிர் போகா முன்னம், உமது குருதியில் வீரம் குதித்தாடுவது நிற்காமுன்னம், தமிழகத்தின் கீர்த்தி குறையாமுன்னம், கலிங்கனே கடம்பனே, வங்கனே, எவனே திறை தரமறுக்கிருன் எனில், தமது மானத்தை மாய்க்க நினைக்கிருன் என்றே பொருள். மூவேந்தரிலே மற்றையோர் என்ன எண்ணுவர்! மேலே, கங்கைக் கரையிலே உலவும் ஆரியர்கள் எவ்வளவு கேலி செய்வர்! குலோத்துங்கனின் நாட்கள் குறுகிவிட்டன என்று கொக்கரிப்பர். சோழ மண்டத்திலே போர் வீரர்கள் கூட்டம் கூனிவிட்டது என்று கூவுவர்! உண்மை நிலை அதுவா! ஓதிய மரமா நாம்? போர்த் திறம் இழந்தோமா? தோள் வலியும் மன வலியும் இழந்தோமா? முன்னேரின் புகழுக்கு நாம் மாசுகளா? முது மொழிகளுக்குக் கரையான்களா? ஆண்மையற்ற கூட்டமா? அஞ்சிவாழும் ஆமைகளா? நயவஞ்சக நரிகளா? நாம் ஏறுகள்! நாம் தமிழர்! கொலைவாளைத் தூக்குவோம், கொடுமைகளைவோம்! மாற்ருனின் ஆயுதங்களை நமது மார்பெ

னும் மதிலிலே வீசச் செய்து மகிழ்வோம். வீரப் போரிலே, வெற்றிகாண்போம். வீழ்ந்தாலோ, புகழ்த் தழுவும் பேறு பெறுவோம். மறத் தமிழரே, கலிங்க நாட்டு மன்னன் மீது போர் தொடுக்தாகி விட்டது. உமது குருதியைக் கொட்ட, உடலைக் களத்திலே வீழ்த்த, அச்சாரம் வாங்கி விட்டேன். ஆண்மையாளரே! சின்னாட்கள், சிங்காரத் தமிழகத்தை உங்கள் செல்வக் குடும்பத்தை, காதலை, கவிதையை, காட்சியை, மறந்து பிரிந்திருங்கள். வானமே கூடாரம்; தரையே பஞ்சணை, ஆயுதங்களே தோழர்கள்; கானூறே காதலி; போரே சரசம்; இதுவே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். போரிடத் துணிவு பிறவாதவரே, ஒதுங்கி நில்லுங்கள் எவரேனுமிருப்பின். அவர்கள் மீது நான் காயேன். உறையூர் போகச் செலவு தருவேன். கோழைகள் வீரர்கள் கூட்டத்திலே இருத்தல் கூடாது. பதரும் மணியும் கலத்தல் வேண்டாம்! வீரர்களே, இன்றே துணிந்து கூறுங்கள், போருக்குத் தயாரா!" என்று மன்னன் உருக்கமாகப் பேசிக் கேட்டான். "தயார்! தயார்! தயார்" என்று வீரர்கள் முழக்கம் செய்தனர். மன்னவன் சிரித்தான்.

"மகிழ்ந்தேன்! வீரர்களே, உம்மை வாழ்த்துகிறேன். கலிங்கம் சென்று, வென்று, வாகைசூடி வருமளவும், நான் காஞ்சியிலேயே தங்கி இருக்க முடிவு செய்துள்ளேன். உங்களை விட்டுப் பிரிந்துள்ள காதலிகளின் கண்கள் கக்கும் கனலினின்றும் தப்பவே, நான் உறையூர் போகாது இங்கிருக்க எண்ணுகிறேன்" என்று மன்னனுரைத்திட, வீரர்கள் மகிழ்ந்தனர்.

வீரமணி, மன்னனை வணங்கி, "மன்னரே, மங்கையரின் விழிகளிலே கனல் கக்குமென்றீர்கள், உண்மையே. ஆனால் காதலில் கட்டுண்டோ, கிலியால் தாக்குண்டோ, வீரர்கள் களம்புகாது. கட்டிலறை நோக்கி நடந்திடின், தமிழ் அணங்குகள், "இத்தகைய கோழையையா நான் பெற்றேன் மணாளனாக" என்று கூறிக் கண்களில் புனல்சோர நிற்பர்" என்றான்.

மன்னன், "வீரமணி மாதர் விழி பற்றிய ஆராய்ச்சியை மெத்த நுணுக்கமாகக் கண்டுள்ளானே" என்று கூறிட, வீரமணி வெட்கித் தலை குனிந்தான். அதே வேளையில், நடனராணியும் வெட்கித் தலைகுனிந்து இருந்தாள், அரண்மனையிலே!

• • •

"அடி கங்கா! உங்கள் நாட்டுக் கதை ஏதாகிலும் சொல்லேன் கேட்போம்" என்று அம்மங்கை கேட்க, ஆரியப்பெண் "ஆயிரக்கணக்கிலே உண்டு கதைகள்; அவைகளிலே உமக்குப் பிடித்தமானது எதுவாக இருக்குமென்றே யோசிக்கிறேன்" என்று உரைத்தாள். நடனராணி "எதையாவது ஒன்று சொல்லு கேட்போம்" என்றாள். அரசிளங்குமரி "வீரக் கதைகள் கூறு" என்றுகூற, நடனராணி சிரித்துக்கொண்டே "அது கிடையாது" என்றுரைத்தாள். "ஏனில்லை ராணி? பத்துத் தலையும் இருபது கரங்களும் கொண்டு, அஷ்டதிக்குப் பாலர்களை வென்று, மாயாஜாலம் மகேந்திர ஜாலம் கற்று மாவீரனெனப் பெயரெடுத்த இராவணனை எங்கள் இராமபிரான் சம்ஹாரம் செய்ததும், இலங்கையை நிர்மூலப்படுத்தியதும் வீரமில்லையோ? எங்கள் இனத்தினிடமே இந்த நடனாவுக்குத் துவேஷம், நாங்களும் வீரமான இனந்தான்" என்று கங்கா கோபித்துக் கூறினாள்.

நடனம் சாந்தமாகவே பதிலுரைத்தாள். "அடி பாலா! நீ சொன்ன கதை மனிதனுடையதல்லவே; மகாவிஷ்ணுவின் அவதாரக் கதையென்றுதானே உங்கள் புராணம் கூறுகிறது. அரசியார் கேட்டது, சாதாரண மக்களிலே வீரராக இருப்பவரின் கதையைத்தானே; கடவுளின் கதையல்லவே, கடவுளின் வீரம், தீரம், பராக்கிரமங்கள்பற்றிக் கதை வேண்டுமோ? கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்தவர் என்றுதானே பொருள்.

இராமரின் வீரத்தைவிட அந்தப் புராணமூலம் வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம், அக்னியாஸ்திரமாகியவைகளின் வேடிக்கைகள்தான் அதிகமாக விளக்கப்படுகின்றன. அரசியார் அதைக் கேட்கவில்லை; உங்கள் நாட்டு வீரர் கதை ஏதேனும் கூறச் சொன்னார்கள்; சொல்லு இருந்தால்" என்று நடனம் விளக்கினாள். கங்கா "எனக்கொன்றும் கவனமில்லை" என்று கூறி முகத்தைச் சுளித்துக்கொள்ளவே அரசிளங்குமரி "இதென்ன வம்பாகிவிட்டது. வீரக்கதை கிடக்கட்டும்; மாதரைப்பற்றி கூறு" என்றாள். கங்கா மௌனம் சாதித்தாள். "நீ கூறு நடனா! பாலாவுக்குக் கோபம் அடங்கட்டும்" என்று அம்மங்கை கூறிட, நடனம் கதை சொல்லத் தொடங்கினாள். "தேவி! இது நம் நாட்டுக் கதையல்ல, கங்கைக்கரையோரத்துக்காதல்கதை" என்று ஆரம்பிக்கும்போதே, கங்கா "தேவி! வேண்டுமென்றே நடனம் என்னை அவமானப்படுத்தப் போகிறாள். அதற்காகவே கதை சொல்ல முன் வந்தாள். நான் பூத்தொடுக்கப்போக உத்திரவு கொடுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள். "அம்மங்கை, சரி! சரி! உங்கள்சண்டையும் வேண்டாம் கதையும் வேண்டாம்" என்று கூறிவிட்டாள்.

நடனராணிக்கும் அம்மங்கைக்கும் விரோதம் மூட்டிவிடவேண்டுமென்பதே பாலாவின் திட்டம். ஏற்கனவே அம்மங்கை தன்னிடம் பிரியமாக நடக்கும்படியான வழியை உண்டாக்கிக்கொண்டாள். ஆனால், தன்னை நடத்துவதைப் பார்க்கிலும் அம்மங்கை நடனராணியையே அதிக மரியாதையாக நடத்துவது கங்காவுக்குப் பிடிக்கவில்லை. எப்படியேனும் நடனத்தை அவளிருந்த பீடத்தினின்றும் கீழே இறக்கிவிடவேண்டுமென்று துணிவு கொண்டாள்!




---

**கடமை**

நமது வாழ்க்கை பெருங்கடமைகளுக்காக அளிக்கப்பெற்றுள்ளது, சுயநலத்திற்காக அன்று. குறிக்கோளில்லாத கனவுகளில் வீணாகக் கழிப்பதற்காக அன்று. நம்மை அபிவிருத்தி செய்துகொண்டு மனித சமூகத்திற்குத் தொண்டு செய்வதற்காக.

—ஆப்ரேடிவீர்.

# கம்யூனிஸ்டுகளுக்குக் காணிக்கை (2)

அன்புள்ள நண்பா!

நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு மட்டுமேயல்லாமல், விவசாயப் பெருங்குடியினரின் நல்வாழ்வையும் சோஷலிச அடிப்படையில் உயர்வடையச் செய்ய வேண்டுமென்ருல், அதற்கு விவசாயத் துறையில் இயந்திரங்கள் பெருமளவுக்குப் பயன் படுத்தப்படவேண்டும் என்பது லெனின், கம்யூனிஸ்டு கட்சிக்கு வகுத்தளித்த திட்டம் என்பதைக் கண்டோம், கடந்த கிழமை!

ஏராளமான சாகுபடி இயந்திரங்களை சோவியத் அரசாங்கமே விவசாயப் பண்ணைகளுக்குக் கொடுத்துதவியது. பண்ணைகள்கூட தம் செலவிலேயே டிராக்டர்களை வைத்துக்கொண்டிருந்தன.

இதுபோன்ற விஞ்ஞானமுறைச் சாகுபடியினுல் சோவியத் நாடு, 1958ல் உற்பத்திச் செய்த அளவை விட, 1965ல் பலமடங்கு அதிகம் உற்பத்தியைச் செய்து குவித்தது. இந்தியாவுக்குக்கூட உணவுப் பண்டம் அனுப்பி உதவும் அளவுக்கு உற்பத்திக் குவிந்தது!

நண்பா! 1965ல் சோவியத் கூட்டுப் பண்ணைகள் மிக அதிக அளவுக்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுத்த அதே வேளையில் பண்ணைக்குப் பண்ணை கூலி நிலைகள் எப்படி இருந்தன என்று இக்னத்தோவ்ஸ்கி என்ற ரஷ்ய—கம்யூனிஸ்டு—எழுத்தாளர் கூறுவதைக் கொஞ்சம் கவனி:

> செய்த வேலைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு ஊதியம் அளிப்பதற்காக ஒதுக்கப்படும் நிதி, பண்ணையின் மொத்தப் பொருளுற்பத்திப் பரிணுமத்தையும், வருமானத்தையும் பொறுத்ததாய் இருப்பதால், அது (கூலி) இடத்துக்கு இடம், பண்ணைக்குப் பண்ணை மாறுபடுகிறது.

என்ன புரிகிறது இதிலிருந்து? ரஷ்யாவில்கூட கூலிப் பிரச்னை இருக்கிறது. போதிய அளவு கிடைக்காத நிலை இருக்கிறது. ஒரே வேலைக்கு—இடத்துக்கு இடம் கூலிவேறுபாடு நிலவுகிறது என்பதல்லவா!

ஏன் இந்த நிலைமை! விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே விதமான வேலையைத்தான் செய்கிருர்கள். ஒரே விதமான இயந்திரங்களுடன்தான் போராடுகிருர்கள். என்ருலும் இடத்துக்கு இடம், பண்ணைக்குப் பண்ணை கூலி கொடுக்கப்படுவதிலே வேறுபாடுகள்! இந்த வேறுபாடுகள் சில சமயம், செய்தவேலை அளவுக்குக்கூலி தரப்படுவதால் ஏற்படுகின்றன; அல்லது உற்பத்திக் குறைவு அன்றி உற்பத்திப்பெருக்கம் காரணமாக கூடவோ, குறையவோ செய்கின்றன!

எனவே, நண்பா! கூலிப் பிரச்னை உற்பத்தியைப் பொறுத்தும் நிர்ணயிக்கப்படுகிறது ரஷ்யாவில்! அத்துடன் உழைப்புக்கேற்ற ஊதியம் மட்டிலுமே தரப்படுகிறது. நன்கு சிந்திக்க வேண்டிய விவகாரம் இது.

காரல்மார்க்ஸ் தன் மூலதனம் என்ற நூலின் முதல் பாகத்தில்:

> எந்திரத் தொழில் என்பது மனிதன் இயற்கையைச் சமாளிக்கும் விதத்தையும், வாழ்க்கையை நிலைநிறுத்தும் பொருள்கள் உற்பத்தி முறையையும் வெளிப்படுத்துகிறது.
>
> அத்துடன், அதன் மூலமாக ஏற்படும் சமூக உறவுகளின் அமைப்பு முறையையும், அவற்றிலிருந்து வெளிப்படும் சிந்தனைக் கோட்பாடுகளையும் அது தெளிவாகக் காட்டி விடுகிறது.

என்கிருர். மனித சமூகத்தில் எந்திரங்களின் பங்கு எந்த அளவுக்கு ஊடுருவி நிற்கிறதோ, அந்த அளவுக்கு மனித சமூகத்திற்கு உயர்வு தருகிறது. சமூக அமைப்புகளை அது மாற்றுகிறது. சிந்தனைக் கோட்பாடுகளை அது தெளிவுபடுத்துகிறது — என்று விளக்கி இருக்கிருர்.

இதற்குப் பிறகுதான் எந்திரங்களைப் பயனபடுத்தி உற்பத்தி மிகுதியாக்கும் இடங்களிலேகூட கூலி வேறுபாடு.

இதனை எடுத்துக் காட்டுவதன் மூலம் கூலி உயர்வு கூடாது என்பதைச் சுட்டிக்காட்டவில்லை! ரஷ்யாவிலேகூட இது தவிர்க்கமுடிந்ததாயில்லை என்றுதான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விவசாயப் பணியிலேயே இந்த நிலைமை, அங்கு! பண்ணை முறையில் செயலாற்றி, உற்பத்தியைக் குவித்துக்கொண்டிருக்கும் அங்கேதான்!

1965லேயே ரஷ்யாவின் நிலை இதுதான். ஒரு தரமான வேலைக்குக்கூட வேறுபாடுடைய தன்மையில் கூலி நிலை.

இங்கே நம் நாட்டில், கடந்த 20 ஆண்டுக்காலத்தில் காங்கிரசுக் கட்சி அலங்கோலப்படுத்திச் சென்ற

நாட்டை, தொழில்துறையை, விவசாயப் போக்கை கடந்த இரண்டரையாண்டுகளில் எத்தனையோமடங்கு மாற்றியமைத்துக்கொண்டுதான கழக அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. அண்மையில்கூட கூலி நிர்ணயம் செய்து அவசரச் சட்டம் ஒன்றுகூட பிறப்பிக்கப் பட்டிருக்கிறதே!

கம்யூனிஸ்டு நண்பர்கள் மறந்தார்களா? இல்லை நண்பா, கழகத்தின்மீது இப்படியொரு குற்றத்தைச் சுமத்தி தொழிலாளர்களுக்கிடையே கழகம் பற்றிய மாறுபட்டக் கருத்தை ஊட்டுவதற்கே இவைபோன்ற குற்றச் சாட்டுக்களைத் தொடுத்துக் கொண்டு வருகின்றனர்.

> விவசாயத் தொழிலில் கூலிச் சிக்கல் ரஷ்யாவில்கூட இருக்கிறது என்பதை நாம் அந்த ஏழை உழவர் பெருமக்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் எடுத்துக் காட்டவேண்டிய முறையில், எடுத்துக் காட்டவேண்டிய நேரத்தில் எடுத்துக் காட்டினால், கம்யூனிஸ்டு நண்பர்களது போக்கு எவ்வளவு இழிவானது என்பதைப் புரிய வைக்க முடியும்.

ரஷ்யாவிலேயே கூலி வேறுபாடும் அதன் காரணமாக மனக் குமுறல்களும் இருக்கும்போது, இங்கே மட்டும், இத்தனை ரூபாய் கூலியும், இத்தனைப் படி நெல் அல்லது அரிசியும் கொடுத்தால்தான் சாகுபடி வேலைகளைச் செய்யமுடியும்—என்று கம்யூனிஸ்டுகள் திரண்டு நின்று, விவசாயத் தொழிலாளர்களைக் கூட்டி வைத்து உரத்தக் குரலில் ஒலி முழக்கங்களை எழுப்பி விட்டு, வயலில் இறங்கவே தடையும் போடுகிறார்கள் என்றால், விவசாயக் குடியினரிடையே மார்க்சும், எங்கெல்சும கண்டுரைத்த சோஷலிசத்தை எவ்வாறு உண்டாக்கப் போகிறார்கள்?—என்ற திசையில் நாம் ஏன் சிந்தனை செய்யக்கூடாது? நம் சிந்தனையை அந்த உழவர் பெருங்குடிக்கு ஏன் படைக்கக்கூடாது?

> நாங்கள் என்ன பிரச்னைக்காகப் போராடுகிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, அந்தப் பிரச்னைகளை மிரட்டுங்கள் நண்பர்களே

என்று பிரச்னை பற்றி நினைவுபடுத்துகிறார் ஜனசக்தி கட்டுரையாளர்.

> நண்பரே! உங்கள் பிரச்னை புரிகிறது! கடவுளேகூட ரொட்டி, வெண்ணை வடிவத்தில் வந்துதான் மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற அளவில் உள்ள அந்தப்பிரச்னை என்ன என்றும் புரிகிறது! அந்தப் பிரச்னையின் கொடுமையைத் தமிழக அரசு மிரட்டிக் கொண்டுதான் இருக்கிறது. பிரச்னையின் பயங்கரம், அரசின் நடவடிக்கைகளால் மிரண்டோடிக் கொண்டுதான் இருக்கிறது.
>
> ஆனால் கம்யூனிஸ்டு நண்பர்களே, எங்கே பிரச்னை தீர்க்கப்பட்டுவிடுமோ என்று நீங்கள் மிரள்கிறீர்கள்!
>
> பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டால், புரட்சியின் விதைகளை இந்த மண்ணில் தூவ முடியாமற்போய்விடுமோ என்று நீங்கள்தான் மிரள்கிறீர்கள்!
>
> எனவேதான், பிரச்னை தீர்வுக்கு வரமுடியாத அளவுக்குச் சங்கடங்களை, போராட்டங்களை, டிராக்டர் எதிர்ப்புக்களை நீங்கள் உருவாக்கிக்கொண்டு வருகிறீர்கள்.
>
> விவசாயப் பிரச்னையில் கம்யூனிஸ்டுகளது நடைமுறை, உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கத் தக்கனவாகவே இருக்கின்றனவேயொழிய, உற்பத்தியைப் பெருக்கி அந்த உழவர் குடிமக்களது வாழ்வை உயர்த்தத்தக்கதாயில்லை.
>
> எனவேதான் தோழர்களே, கம்யூனிஸ்டு கட்சி உணவுப் போராட்டம் நடத்தும் தகுதியைப் பெற்றிருக்கவில்லையென்று கூறுகிறோம்!

என்றல்லவா எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது நண்பா! இன்னொரு ரஷ்ய எழுத்தாளர், எஸ். கொலஸ்னேவ் என்ற பெயருடையவர். எக்னாமிக்கா செல்ஸ்கொகொ கொழியாஸ்த்வா என்ற இதழில் 1967-ல் எழுதுகிறார்:

> நமது விவசாய மக்களிடையேயான உறவுகள் ஒருவருக்காக எல்லோரும்; எல்லோருக்குமாக ஒருவர்—என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தெளிவாகவே குறிப்பிடுகிறார் நண்பா! நாம் அனைவரும் ஒருவருக்காக! அந்த ஒருவர் அனைவருக்குமாக! என்று! இதனைக் கோட்பாடாகவேக் கொண்டுள்ளதாம் கம்யூனிசம். தமிழகக் கம்யூனிஸ்டு நண்பர்கள் இதற்கு விளக்கமளித்தால் நல்லது.

இதே எழுத்தாளர், அதே கட்டுரையில் இன்னோரிடத்தில் குறிப்பிடுகிறார்:

> விவசாயம், சமூக உற்பத்தியின் ஒரு விசேஷத்துறை என்பது தெரிந்ததே. அதில் இயந்திரங்களையும் கருவிகளையும் துணையாகக்கொண்டு மனிதனின் உணர்வுபூர்மான லட்சிய நோக்குடன் கூடிய உழைப்பு மட்டுமின்றி இயற்கையும் ஈடுபடுகிறது. விவசாய உற்பத்தியைப் பாதிக்கும் பல இயற்கை இன்னல்கள் மனிதனின் உறுதியான கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாயிருந்து வருகின்றன.

போதுமா நண்பா, கம்யூனிஸ்டு நண்பர்கள் "உணவுப் போராட்டம்" நடத்த வேண்டிய ஒரு சங்கடச் சூழ்நிலை நாட்டில் ஏன் ஏற்பட்டதென்று புரிகிறதா!

நமக்கு, நம்முடைய எந்தக் கட்டுரைக்குப் பதில் சொல்ல வந்தார்களோ, அதே கட்டுரையின் இன்னோர் இடத்தில்—

> கழக அரசு, தன் அனைத்து வேலைத் திட்டங்களிலும் முதன்மையானதாக விவசாய உற்பத்திக்கு முதலிடம் கொடுத்துச் செயல்

## கடமை

தொலைவிலே மங்கலாகத் தெரிவதைக் காண்பது நமது கடமையன்று; நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை, —கார்லைல்.

கடமையில்லாத ஒரு கணம்கூட இல்லை.

—ஸிஸரோ.

**பட்டுக்கொண்டு வருவதைக் கம்யூனிஸ்டுகள் அறிந்தே வைத்திருக்கிறார்கள்**

என்று நாமே எடுத்துக் காட்டி இருக்கிறோம். எங்களுக்கு இவை பற்றித் தெரியாது என்று கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறுகிறார்களா? அல்லது—

**விவசாய உற்பத்தியைப் பாதிக்கும் பல இயற்கை இன்னல்கள்**

கடந்த இரண்டாண்டுக் காலத்திலும், அதற்கு முன்னும் இந்த நாட்டில் ஏற்பட்டு பெருங் கொடுமையை உண்டாக்கின என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்களா?

இயற்கை உற்பாதங்களின் கொடுமைகளால் மனித முயற்சிகளே கூட குலைந்து விடக்கூடும் என்பதை சோவியத் விவசாய விஞ்ஞானப் பேரவையின் உறுப்பினர் கொலஸ்னேவ் ஒப்புக்கொள்கிறார்.

கடந்த இரண்டாண்டுக் காலத்தில் இயற்கைக் கேடுகளால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதை கம்யூனிஸ்டு தோழர்கள் மறுக்கிறார்களா? இந்த இடைக்காலத்தில் இயன்ற மட்டும் சாகுபடியை தடையற்ற முறையில் நடத்த அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்று கூறுகிறார்களா? முயற்சிகள் போதாது என்றால்கூட பொருளிருக்க முடியும். முயற்சிகளே இல்லை என்பது கம்யூனிஸ்டு நண்பர்கள் வாதமா?

வரட்சி நிவாரணப் பணிக்கு கழகத்தோடு இணைந்து குரல் கொடுத்தது ஏன்? என்று இப்போது நாம் அவர்களைக் கேட்கலாமா?

தோழர் கல்யாணசுந்தரம் அவர்களது கட்டுரையில் உணவுப் பிரச்னை காரணமாக அரசும், நாடுகளும் அழிந்திருக்கின்றன என்பதைத் தெளிவாகவே எடுத்துக் காட்டிவிட்டு, உணவுப் பிரச்னையில் அரசாங்கத்தின் முனைப்புக்களையும் உணர்ந்து வைத்துக்கொண்டு, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்குத் தடைகளையும் உண்டாக்கிக்கொண்டு,

**ரேஷன் அளவை 1200 கிராமாக உயர்த்துவீர்!**

என்று கேட்டு ஒரு போராட்டம் என்றால் பொருள் என்ன நண்பர்களே!

நாளை 17, 18, 19 ஆகிய மூன்று நாட்களும் உணவுப் போராட்டத்தின் இரண்டாம் கட்டமாம்! மூன்றாம் கட்டம்கூட இருக்கக் கூடும்!

**இந்தப் போராட்டங்கள் யாவும், கம்யூனிசச் சித்தாந்தங்களுக்கு எதிரானவை!**

**லெனின், மார்க்ஸ் முதலானோரின் கொள்கை, கோட்பாடுகளுக்கு எதிரான விளைவுகளைத் தோற்றுவிக்கும் நடைமுறைகளை உண்டாக்கக் கூடியவை!**

எனவேதான் நண்பா, நம்முடைய எடுத்துக் காட்டுக்களைக் கண்டு, 'ஜனசக்தி' மிரள்கிறது.

உண்மைகள் புதைக்கப்பட வேண்டும் என்பது அதன் அடிப்படைச் சித்தாந்தமாக இருக்க முடியாது என்பதை லெனினது கட்டுரைகள் கூறுகின்றன.

புரட்சிகள் எங்கெங்கே, எப்படி எப்படி, எந்தெந்த வர்க்கங்களுக் கிடையே. எந்தெந்த சந்தர்ப்பங்களில் பூக்கவேண்டும் என்பதை மார்க்சின் சித்தாந்தங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கம்யூனிஸ்டுகளது உணவுப் போராட்டத்தால் எந்த புரட்சி பூத்துவிடப்போகிறது என்பதை, பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். சோசலிசக் கொள்கையின் எந்தப் பகுதி, இவற்றின் மூலம் செயல்படப் போகிறது என்பதையும் காத்திருந்துதான் நண்பா, கண்டு பிடிக்கவேண்டும்!

கம்யூனிஸ்டு தோழர்கள் ஆத்திரப்பட்டுப் பயன் இல்லை; உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அரசுக்கும், உழவர் பெருமக்களுக்கும் உறுதுணையா யிருக்க வேண்டும், உற்பத்தியை மிகுத்துத் தர ஒத்துழைப்புகொடுத்துவிட்டு. உற்பத்தி சீராக வினியோகப் படாதபோது போர்க்கோலம் பூண்பதிலேதான் பொருள் இருக்கமுடியும். பெருமை இருக்க முடியும்!

அல்லாமல், அரசியல் காரணங்களுக்காக இது போன்ற உணர்ச்சிப் பிரச்னைகளை உண்டாக்குவதென்றால், மக்கள்மீது கொண்ட அக்கறை என்பதைவிட, கட்சி வளர்ச்சியின்மீது கொண்ட பற்று என்று பொருளாகிப் போகும்.

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

---

**12-ம் பக்கத் தொடர்ச்சி**

எடுத்தெறிந்த பதில்கூறி பிடிவாதத்தோடு அந்த வாலிபருடன் தொடர்ந்து பழகுவதாக அறிகிறேன். அந்த வாலிபர் மிக்க செல்வந்தர் வீட்டுப் பிள்ளை என்றும் அந்த வாலிபரின் பணத்திற்காகத்தான் அவனுடன் பழகுவதாகவும் ஊரார் வதந்தியைக் கிளப்புகிறார்கள். ஆனால் உன் எண்ணத்தை நான் அறியேன். அவர்கள் சொல்வது உண்மையானால், உனக்கு நான் சொல்லிக்கொள்வேன் பணம் ஒன்றும்.........ஒருவரது வாழ்க்கையைச் சீர்திருத்திவிடாது. நல்ல மனம்தான் எதையும் சாதிக்கும். உன்னுடன் பழகும் அந்த வாலிபருக்கு உண்மையிலேயே உன்னை மணக்க விருப்பமானால் அவரின் பணத்தை விட்டுவிட்டு உன்னைத் திருமணம் செய்துகொள்ளச்சொல். அதை அந்த வாலிபர் எந்த வகையில் உணருகிறார் என்பதை ஊன்றிக் கவனி. மதிப்பளித்து, பணத்தை மதிக்காமல் உதறித் தள்ளிவிட்டு உன்னை மணக்க முன்வந்தால் நல்ல மனம் இருப்பதாக அறிந்துகொள். இல்லை பணம்தான் எல்லாம் என்று நினைத்து உன்னை உதறித் தள்ளிவிடுகிறாரா என்பதைக் கவனி.

என் கடிதம் உனக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை நானறியேன். பொதுவாக பணத்துடன் நேர்வழி இருக்கவேண்டும்—நாணயமான போக்கு இருக்கவேண்டும். என்வரை குறுக்குவழி அமைதியின்மையையும் — ஆதரவற்ற நிலையையும்தான் தந்தன. எதிலும் நிதானம் வேண்டும். உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதைவிட அறிவுக்கு இடம் கொடுத்து நடக்க வேண்டும் என்பதுதான் என் அனுபவத்திலிருந்து எடுத்துக்காட்ட முடிந்ததாகும். நிகிலா அறிவோடு நட! நடப்பாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,

சௌந்தரி,

# அறிவுக்கு இடம்வேண்டும்!

அன்புள்ள நிகிலா,

நீண்ட நாட்களுக்குப் பிறகு நான் எழுதும் இந்தக் கடிதத்தைக் கண்டு ஆச்சர்யமே ஏற்படும். நீ நேரில் இருந்தால் எத்தனை முறைவேண்டுமானுலும் மன்னிப்புக் கேட்பேன். அந்த அளவுக்கு என் மனம் வேதனையடைகிறது, கடிதம் எழுதாதகுறையாக எடுத்துக்கொள்ளாதே. கடிதம் ஒன்றுதான் அன்பையோ நட்பையோ வளர்த்திடும் என்பதில் எனக்கு நம்பிக்கை மிகக்குறைவு. என் சுக வாழ்க்கையை அறிந்தவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள். என்னைப்பற்றிக் கவலை இல்லை. அவர்கள் என்னைப்பற்றி எந்த விதமான கீழ்த்தரமான எண்ணங்களை வளர்த்திடினும் மற்றவர்களிடம் வாரி இறைத்திடினும் அதிலும் எனக்குக் கவலையில்லை. அவர்களுக்கும் எனக்கும் இடையே நட்பெனும் அன்புபிணைப்புக்கிடையாது. உன்னையும் என்னையும்பிணைத்திட்ட அந்த அன்பு வாழ்க்கையைப்பற்றி உன் மனதை மிக்க வாட்டும்—வதைக்கும். அந்த வேதனையை உன் மென்மையான உள்ளத்தை வேதனைக்குள்ளாக்கும். ஆகவேதான் உனக்கு நான் இதுவரை கடிதமே எழுதவில்லை.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பார்கள் நல்லதைச் சொல்ல. ஆனுல் கெட்டதைச் சொல்ல பன்றியோடு சேர்ந்த கன்று என்று சொல்லுவார்கள். நிகிலா எனக்குத் தெரியும், உன்னை நம் ஊரார் ஒன்றும் பூவோடு சேர்ந்துவிட்ட நார் என்று சொல்ல மாட்டார்கள்—பன்றியோடு சேர்ந்த கன்று என்றுதான்சாடியிருப்பார்கள். என்ன இது...நம் தோழி சௌந்தரி கூடவா இப்படி எழுதுகிருள் என்று நினைக்காதே! நானும் நீயும் பழகிய நாளில் எத்தனையோ நாள் தனியே சந்தித்துப் பேசியிருப்போம். உலகில் உள்ள விஷயங்கள் அத்தனையும் பற்றிப் பேசியிருப்போம். அத்தனையும் உண்மையே. ஆனுல்...... உலகில் உள்ள அத்தனை விஷயங்களையும் பேசினுேமேயொழிய என் வாழ்க்கையைப்பற்றி உன்னிடம் மறந்தும் பேசிவிடவில்லை மறைத்து வைத்தேன். காரணம் நீ மிகவும் நல்ல பெண். காதல் கீதல் என்பதெல்லாம் நீ விரும்பாத ஒன்ருக இருந்தது அப்போது. நல்ல பாதையில் உள்ளவர்களை சேற்றுக்கு அழைத்துப் போக நான் விரும்பவில்லை, ஆமாம் என் வாழ்க்கை சகதிநிறைந்த பாதை. சகதி நிறைந்த அந்த வாழ்க்கைக்கு உன்னை அழைத்துக் கொண்டுவர நான் விரும்பவில்லை.

நான் என் சொந்த வாழ்க்கையை செப்பனிட்டுக்கொள்ள குறுக்கு வழியில் இறங்கினேன். தெய்வமாவது நம் வாழ்க்கைக் கஷ்டத்தைப்போக்குமா என்று பார்த்தேன். அந்த தெய்வம் எங்கே? எங்கே? என்று தேடினேன், நான் தேடிய தெய்வம் என் கண்களுக்குப் புலப்படவில்லை. ஓடி ஓடித் தேடிய என் அறிவுக்கு எட்டிய வரை தெய்வம் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. உலகில் எத்தனையோ பேர் சுகமாக இருக்கிருர்களே அவர்களுக்குத் தெய்வத்தின் துணை இருக்கிறதா என்றுபார்த்தேன். அதுதான் இல்லை என்பதை என்னுல் உணரமுடிந்தது. பின் எப்படி அவர்கள் சுகமாக இருக்கிருர்கள் என்பதை அறிய முயற்சித்தேன். பணம் ஒன்றினுல்தான் அவர்கள் சுகமாக இருக்க முடிகிறதென்பதை உணர ஆரம்பித்தேன். பணம் எப்படி அவர்களிடம் குடிகொண்டுள்ளது என்பதை அறிய ஆர்வம் கொண்டேன்......ஆராய்ச்சியும் நடத்தினேன். என்னைப் பொறுத்தவரை இன்றைய உலகில் கஷ்டப்படுபவர்கள் அத்தனைப் பேரும் பணம் படைத்தவர்களாக இல்லை. அதிகப் பணம் வைத்துக் கொண்டு நிம்மதி இல்லாமலே எத்தனையோ பேர் இருக்கிருர்கள். ஆனுல் பணத்தைப் பற்றிய கவலை அவர்களிடம் காணப்படவில்லை, பணத்தை எப்படிக் காப்பது என்பதில்தான் அவர்கள் கவலை மிகுந்தவர்களாக காணப்படுகிருர்கள். அப்படி அளவுக்கு மீறிய பணம் வைத்திருப்பவர்களிடம் அத்தகைய மிகுந்த செல்வம் எப்படி வந்தது என்பதைக் கூர்ந்து கவனித்தேன்... அவர்களெல்லாம் குறுக்கு வழியில் வாழ்வு தேடிப் பணம் படைத்திருப்பதாகத்தான் என் அன்றைய அறிவு உணர்த்தியது, நேர்மையாக நடந்துகொள்ளும் பெருர்பான்மையானவர்களுக்குத் தொல்லைதான் மிச்சம். மனஉளைச்சல்தான் அதிகம். நிம்மதியின்மைதான் அவர்களுக்குத் துணை. ஏன், உன் அடுத்த வீட்டு சாவித்திரியை எடுத்துக் கொள்ளேன். அவளும் என்னைப் போலத்தான் இளம் விதவை. அவளை இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ள எத்தனையோமுறை நீயும் நானும் சொல்லியிருப்போம். அவள் ஒத்துக்கொண்டாளா?...... காய்ந்த ஆலிலையைத் தைத்தாவது அரை வயிறு சாப்பாடு சாப்பிட்டுக் காலங்கழித்தாளேயொழிய இரண்டாம் திருமணம் செய்துகொண்டு நிம்மதியாக வாழ நினைத்ததாஅவள் உள்ளம்? எப்படியோ......அவளும் நாளைக்கழித்தாள்—பிழைத்தாள் அந்த வாழ்வில் அவள் நிம்மதியைக் கண்டாள்.

ஆனுல் அடுத்த தெருவிலுள்ள அம்புஜத்தைப்பார். அவள் கணவன் எங்கோ அக்கரைச் சீமையில் பட்டாளத்தில் இருந்துகொண்டு மாதம் நூறு இருநூறு என்று பணம் அனுப்பி வைக்கிருன். அம்புஜமோ அந்த சிங்கப்பூர் சாமான் விற்பனை செய்யும் கண்ணப்பனுடன் கள்ளக் காதல் கொண்டு கணவனுக்குத் துரோகம் இழைத்துக்கொண்டே செல்வாக்காக வாழ்கிருள்.

இவர்கள் இருவருடைய வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்,

கஸ்தூரி-நடராசன்

அவர்களுடைய வாழ்க்கை நிலையையும் என் நிலையையும் யோசித்துப் பார்த்தேன். உனக்கு அப்பா அம்மா எல்லாம் இருக்கின்றார்கள்; நல்ல இடமாகப் பார்த்து உனக்குத் திருமணம் நடத்திவைப்பார்கள். ஆனால் என் நிலை அப்படியில்லை நான் என் தாய் தந்தையை விரோதம் செய்துகொண்டு எனக்குப் பிடித்த பாலுவைத் திருமணம் செய்துகொண்டு வெளியேறி விட்டேன். அப்பா அம்மா இருவரும் என்னை என் செய்கை பொறுக்க முடியாமல் சிங்கப்பூரில் இருக்கும் என் அண்ணனிடமே போய் விட்டார்கள். இந்நிலையில் நான் நம்பி வந்த பாலு இறந்துவிட்டார். ஏதோ...வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நானும் கையிலிருந்த ஐந்நூறு ரூபாயை வைத்துக்கொண்டு மூன்று மாதம் காலட்சேபம் நடத்தி வந்தேன்.

கையிலிருந்த ரூபாய் ஐந்நூறு, நூற்றைம்பதானபோது சொகுசான உலகம் என் கண்களைவிட்டு மறையத் தொடங்கியது. பயங்கர உலகத்தின் படிகள் எனக்காகவே உருவாக்கப்பட்டது போலத் தெரிய வந்தது. கையிலுள்ள நூற்றைப்பது ரூபாய் செலவான பிறகு நம் நிலை என்ன? என்ற கேள்விக்குறி என் மனதில் அடிக்கடி எழ ஆரம்பித்தது. நீதியையும் நேர்மையையும் துணைக்கழைத்துக்கொண்டு ஒளிமயமான எதிர்காலம் கண்டிட வேலைதேடி அலைந்தேன். நீதிக்கும் நேர்மைக்கும் இந்த உலகம் அளித்த விடை பூஜ்யம்தான். இதற்குள் கையிலிருந்த நூற்றைம்பது நூறாகக் குறைந்தது. ஆகவே எதிர்காலத்தைப் பற்றிய கேள்வி சுழல ஆரம்பித்தது. நாலாவட்டத்தில் அந்த சுழற்சியின் வேகம் அதிகமாகியது. சுழற்சியின் வேகம் அதிகமாக அதிகமாக மயக்க நிலைக்கு இழுத்துவரப் பட்டேன். அந்த மயக்கத்திற்குப் பிறகு ஒரு சிறு தெளிவு. தெளிந்த பின்னர் புது உலகமா தெரிந்தது? அதுதான் இல்லை. மீண்டும் கவலை—தொல்லை—ஏக்கம் மாறி மாறி என்னை அச்சுறுத்திய வண்ணம் இருந்தன. அப்போதுதான் சாவித்திரியின் வாழ்க்கையையும் அம்புஜத்தின் வாழ்க்கையையும் மாறி மாறி யோசிக்க ஆரம்பித்தேன். சாவித்திரி இளம் விதவை. என்ன...சுகத்தைக் கண்டாள்? அம்புஜம் என்ன சுகத்தை இழந்துவிட்டாள்? சாவித்திரி நேர்மையான பெண்ணாயிற்றே என்று நம் ஊரில் உள்ள மனிதர்களில் ஒருவராவது அவளை மதிக்கிறார்களா? இல்லை. நேர்மையையும்—நாணயத்தையும்—கண்ணியத்தையும்—கட்டுப்பாட்டையும் அறவே விட்டுச்சென்ற விபரீத புத்திக்கு சொந்தக்காரியான அம்புஜத்தைக் கண்டித்தார்களா? கடுகளவேனும் அவளிடம் கடுங் கோபத்தைக் காட்டியிருப்பார்களா? அவளைக் கண்டால் நம் ஊர் மக்களுக்குத் தான் எத்தனை பயம்? எத்தனை மரியாதை? சாவித்திரிக்கு இல்லாத மதிப்பும் மரியாதையும் அம்புஜத்திற்கு எதனால் கிடைக்கிறது? நான் நன்றாக யோசித்தேன். எனக்குக் கிடைத்த ஒரே பதில், பணம்தான்! அதுதான் இன்றைய உலகில் செருக்கோடு வாழ்ந்துவரும் தெய்வம். அதற்கு நிகர் அதுவேதான். இன்றைய உலகில் பணம் எப்படி வந்தது என்று யோசித்து முடிவெடுப்பதில்லை. பணம் படைத்தவர் யாராய் இருந்தாலும் அவர்களை ஜாதி மத பேதமின்றி பாராட்டும், தாழ்ந்தவன் தனவந்தவனாகி விட்டால் தரணியிலுள்ளோர் அனைவரும் அவனுக்கு ஆரத்தி எடுக்க முற்படுவர். உயர்ந்தவன் நல்ல மனத்தால் அல்ல பணத்தால் தாழ்ந்திடின் தாகத்திற்குத் தண்ணீர்கூடக் கொடுக்க தைரியமாக மறுப்பர். பணமில்லாதவனிடம் எத்தனை விதமான எண்ணங்கள் மலிந்து இருப்பினும் பாராட்ட முற்படமாட்டார்கள். ஆனால் பணம் உள்ளவனிடம் வெளிப்படையாகக் காணுகின்ற தூய்மையற்ற போக்கினையும், துன்மார்க்க நெறியினையும் கண்டிக்கத் தேவையில்லை; சுட்டிக் காட்ட தேவையில்லை; மற்றவர்களிடம் பேசலாமே...ஆமாம்...பேசக்கூட மாட்டார்கள். அதற்குப் பொருள் அந்த மனிதனுக்குப் பயப்படுகிறார்கள் என்பதல்ல...அவரிடம் சிறைப்பட்டுள்ள பணத்திற்குத் தலை வணங்குகிறார்கள். தான்தோன்றிகளாக ஆகவும் துணிந்துவிட்டார்கள். அக்ரமத்திற்கு ஆலவட்டம் சுற்ற துளியேனும் பயமில்லாதவர்கள் என்றுதான பொருள். ஆக, பணம்தான் இன்றைய உலகின் ஏகச் சக்ராதிபதி என்ற கருப்பொருளை மீண்டும்—மீண்டும் உணர ஆரம்பித்தேன். என் வாழ்க்கையின் மீது இந்த எண்ணங்களை உறவாட விட்டேன். கையிலுள்ள பணத்தைக் கொண்டு எத்தனை நாள் வாழ்ந்துவிட முடியும், நாமும் மற்றவர்களைப் போல வாழவேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்ட நிலையில் அம்புஜத்தின் வாழ்க்கையைத் தைரியமாகப் பின்பற்ற முனைந்தேன். எனக்கென்ன இளமைக்குக் குறைவா...எழிலுக்குதான் குறைவா? இரண்டும் கைகொடுத்தன. பாலு இறந்த பின்னர் சீமான் சிங்காரத்தின் வைப்பாட்டியாக இருந்தேன். பணம்தானே எனக்குத் தேவை! அந்த எண்ணம் ஒன்றுதான் என் கண்களுக்கு முன் நின்றது. மற்றவர்களின் ஏச்சும் பேச்சும் என் காதுகளுக்கு எட்ட முடியாத உயரத்தில் பறந்து கொண்டிருப்பதாக நான் இறுமாந்து இருந்தேன்.

சீமான் சிங்காரத்திற்கு செல்வம் நிறைந்திருந்தது போலவே...காச நோயும் அவர் உடம்பில் நிறைந்திருந்ததை நான் அறிந்துகொள்ள சில நாட்கள் ஆயின. நாலாவட்டத்தில் அவர் நோய் என்னையுப் பற்றிக்கொண்டது. காச நோய் என் உடலை உருக்கிவிட்டது. என் கன்னங்கள் இப்போது குழி விழுந்துவிட்டன. பணம் கிடைத்தது உண்மைதான்...ஆனால் அந்த பணத்தை வைத்துக்கொண்டு வாழ வாழ்நாள்தான் இல்லை. பணத்தை வைத்து எதை எதையோ சாதித்துவிடலாம் என்று நினைத்தேன். குறுக்கு வழி நல்ல பாதை நினைத்த இடத்திற்கு வெகு விரைவில் சென்று விடலாம் என நினைத்தேன். ஆனால்...அந்த வழி என்னை இப்படியொரு பயங்கரப் படுகுழியில் தள்ளிவிடும் என்று நான் கனவில்கூட நினைத்துப் பார்த்திடவில்லை!

அன்று என் இளமையை வேட்டையாட முனைந்து தோற்ற அத்தனைப் பேரையும் இன்று காணுகின்றேன். அவர்கள் என் நிலையைப் பார்த்து ஏளனச் சிரிப்பை வீசி, என் இன்றைய நிலை கண்டு எள்ளி நகையாடுகின்றனர். காலத்திற்கு மனிதர்களின் குணத்தையும், புற அழகையும் மாற்றி அமைக்கின்ற இவ்வளவு பெரிய சக்தி இருப்பதை என்னால் அனுபவித்த பின்புதான் உணர முடிந்தது.

உன் கண்களுக்கு அப்பால் வெகு தொலைவில் இருந்தபோதும் உனக்கு ஏன் இந்த கடிதத்தை எழுதுகிறேன் என்றால்......பொருள் இழந்த உன் தந்தை இறந்த பின்பு வறுமையின் துணையோடு உன்னைக் கட்டிக்காக்கும் அன்னையின் சொல்லையும் கேட்பதில்லை என்பதை அறிகிறேன்......மேலும் உன்னுடன் ஒரு வாலிபர் பழகுகிறாராம். அதை ஊரார் உன்னைக் கண்டிக்க முற்பட்டபோது "எனக்கு எல்லாம் தெரியும்" என்று அவர்களுக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

# 'விதி' செய்த வேலைகள்!

அன்பில்லா நெஞ்சம்போல் வறண்டிருக்கும்
அரபுநாட்டுப் பாலைவனம்!—தொலைவிலெங்கோ
துன்புற்ற சேய்கள்தமை அணைக்குந் தாய்போல்
'ஓயாசீஸ்' பசுஞ்சோலைத் தண்ணீ ரூற்று!
கண்ணெட்டும் பரப்பினுக்கு மப்பா லேதோ
கார்காலப் பிறைபோல பசும்புற் பள்ளம்!
வெண்புற்றாய் நிமிர்ந்திருக்குங் கூடா ரத்தின்
வெளிமேய்ந்து கனைக்கின்ற குதிரை மந்தை!

தூரத்தில் கட்டெறும்புச் சாரை போல
துணைசேர்ந்து வாழ்கின்ற சிற்றூர்!—எந்த
நேரத்தில் மேய்ச்சலங்கே தீர்ந்த போதும்
நிலையின்றிக் குடிபெயரும் வேனிற் பந்தல்!
ஓரத்தில் ஒருகிழவன் மகனோ டங்கே
தோப்பருகே தனிமரம்போல் வாழ்ந்தி ருந்தான்!
தாரத்தை இழந்துவிட்ட அவனே வீட்டின்
தணல்மூட்டி! முரட்டுமகன் குதிரை மேய்ப்போன்!

பேரிச்சை தேன்சுளையைத் தந்த போதும்;
செறிந்துள்ள ஈச்சங்காட் டுள்ளே நச்சுக்
கூரேற்றி வைத்துள்ள ஈட்டி போல
குத்துகின்ற கூரிலைக ளுண்டு! தின்று
நீரேறிக் கொடுத்துவிட்ட குதிரைக் குட்டி
'நில்'லென்று கெஞ்சுகின்ற குரலைக் கேட்டும்
நேராகக் காட்டுக்குள் சென்றே தங்கும்!
நிறைவயிற்றுக் 'கோலி'யாலுல் இனம்பெருக்கும்

முள்ளோடு போராடி நுழைந்த போதும்
முடிவறியாப் பெருங்காட்டிற் குதிரை காட்டும்
வெள்ளோட்டந் பந்தயத்தில் மனிதன் தோற்பான்!
வேகத்தைக் குதிரைக்குப்; தூரத்து வோர்க்குத்
தள்ளாடி வியர்வையிலே குளிக்கும் பேறும்;
தந்துவிட்டுக் குருதியிலே இலைசி ரிக்கும்!
பொல்லாத குதிரைக்கு நன்றி போகும்!
பொருளிழந்த மனிதனுக்கோ அமைதி போகும்!

ஊரோடு சேராத கிழவ னுக்கு
உள்ளதெல்லாம் இரண்டே தான் குதிரை மெத்தப்
போராடி அதைமேய்த்துத் திரும்பும் பிள்ளை
புத்தியிலே 'ஒட்ட கமா' யிருந்தான்! பேச்சில்
வேரோடும் பேதமையைக் கண்ட ஊரார்
'பேரீச்சங் கொட்டை'யெனப் பட்ட ந் தந்தார்
கூரேது மில்லாத 'கொட்டை' யோர்நாள்
குதிரைகளைத் தொலைத்துவிட்டு வீடு வந்தான்!

ஆறாத துயரத்தை யழுகை யாக்கித்
தந்தை,மகன் இருவருமாய்ச் சிந்துங் கண்ணீர்
ஆறுகப் பெருகிவரும் பெருக்கிற் றுங்கள்
அணைகட்டப் போவதா யெண்ணிக் கொண்டு
ஊராரில் இரண்டொருவர் கிழவன்' 'கொட்டை'
கூடாரந் தனைத்தேடிச் சென்றார்—அங்கே
நீரோடும் விழியின்றி யிரண்டு பேரும்
'நிம்மதியாய்ப் படுத்திருக்கக் கண்டார்,—ஆனால்

தேறாத தினவுமனம் தீனி கேட்கத்
திகைப்பெதுவுங் காட்டாமற் "கெட்ட காலம்
நேராத 'துயரவிதி' நேர்ந்த தாலே
நில்லாமற் போயிற்று குதிரை"...யென்றே
கூரான நரிக்கண்ணால் நோட்டம் விட்டார்
கொட்டைகொஞ்சம் புன்சிரிப்பைத் தோற்றுவிக்க;
"யாருங்கள் விதிக்கணிப்பைக் கேட்டார்?" றென்றே
அதட்டிநின்றான் கிழத்தந்தை!—வம்பர் சென்றார்!

காணாமல் ஓடிவிட்ட குதிரை யந்தக்
காட்டிருந்த புதுக்குதிரை நான்கி னோடுங்
கோணாமற் 'கொட்டை'யவன் கூடா ரத்தைக்
குறிப்பறிந்து தேடிவந்த தெட்டாம் நாளில்!
தேனான இச்செய்தி யறிந்த வம்பர்
திரண்டுவந்து "ஆ! ஆ! ஆ! 'விதியி' னாட்சி
வீணான தெனக்காட்டி நன்மை செய்யும்
விந்தைதனைப் பாருமெனக் கூவிச் சென்றார்!

கட்டின்றித் தம்போக்கில் வளர்ந்த நான்கு
காலுயர்ந்த புரவிகளி லொன்றின் மீதிற்
'கொட்டை'க்கு வெள்ளோட்டம் போக வேண்டும்
போலவொரு ஆசைவர முயன்றே யேறிச்
சிட்டொன்று பறந்ததெனப் பறந்தா னந்தச்
சீர்கெட்ட மடக்குதிரை முன்னங் காலைப்
பட்டென்று தூக்கிநின்று வக்க ரிக்கப்
பதறிப்போய்த் தூரத்தில் வீழ்ந்தான் கொட்டை!

வெட்டொன்று வலக்கரத்தில் வீழ்ந்தாற் போல
வேதனைதா னுணர்த்திற்று பரண்டு பார்த்தால்
ஒட்டங்கு விட்டதென முழங்கை வேறாய்
ஒடிந்தோடிக் கிடந்ததைக் கண்டான்!—தந்தை
கட்டொன்று போடுதற்கு விரைந்தான்; ஊரார்
கதையளக்கக் கூடிவிட்டார் அன்றே சொன்னோம்
கொட்டகைக்குக் கெட்டவிதி வரத்தான் காட்டுக்
குதிரைகளும் கூடாரம் வந்த தென்றே!

நொண்டிக்குக் கையில்லை; கிழத்தந் தைக்கு
நோய்ப்படுக்கை தானன்றிக் கஞ்சி யில்லை!
உண்டிக்குக் குறைவில்லாக் குண்டர் வாயோ
உளறாத நாளில்லை, விதியின் பேரால்
தண்டிக்குஞ் சொல்லன்றிக் கருணை யில்லை;
தயவில்லை, ஈரமில்லை; ஆனாற் காலம்
என்றைக்கும் போல்விடிந்து; முடிந்து கொண்டே
எல்லையின்றி நாட்கள்பல நகர்ந்த தங்கே!

பெட்டிக்குப் பூட்டிருந்தா லதையுங் கேட்டும்
பேசாத வாயிருந்தா லதையுந் தங்கள்
முட்டிக்கு வேலையென்று கருதுங் கொள்ளை
முகமூடிக் கூட்டமொன்று வந்த தங்கே!
சட்டிக்கும் அடுப்பிற்குந் தொடர்பில் லாதோர்
சப்பாணி, கை,கால்,கண் ணிழந்து போனோர்;
விட்டுப்பின் மீதமுள்ள கூட்டத் தாரை
'விண்ணுலகு' அனுப்புவதே யவர்கள் கொள்கை!

கொட்டைக்குக் கையில்லை; கிழத்தந் தைக்குக்
கொழுத்ததொரு முதலில்லை யென்ப தாலே
வெட்டிக்குத் தொல்லையேதுந் தராமல் வேறு
வீடுகளில் அள்ளிவந்த பொருளுமீந்து
கட்டிக்கொண் டாரவரின் பயண மூட்டை!
கரும்புகைசூழ்ந் தெரிந்துவிழுங் கூடாரங்கள்
தொட்டுக்கொண் டிருந்தன;மண்! அதனுள் ஆவி
துடித்துக்கொண்டிருந்தன; ஓ! 'விதிதானென்னே

—கு. க. பிறைசூடிப்பித்தன்

# குறையும்-நிறையும்!

இந்தப் பகுதி, இனி கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்ற குறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும்—நிறையும்" பகுதி,
"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

ஏமாற்றமடைந்த இதயத்தின் எழுச்சிக் குரலாக இதனை உங்கட்கு எழுதுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், அரசாள வந்த பின்பு, ஏழை எளியவர்களுக்கு வீட்டு மனைகளும், நிலமில்லாதோருக்கு நிலமும் வழங்கி வருவது ஏடுகள் மூலமும், இதழ்கள் மூலமும் நான் அறிந்ததாகும். நான் காஞ்சிபுரத்தை அடுத்த பரந்தூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஏழை; தையல் தொழிலாளி. காஞ்சிபுரத்தையடுத்த ஒரு கிராமத்தில் அரசுக்குச் சொந்த நிலம் இருப்பதாகவும், அந்த நிலத்தை ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப் போவதாகவும் அறிந்து, நானும், எனது நண்பர் ஒருவரும் முறைப்படி மனுச் செய்து கொண்டோம்.

மனுக் கொடுத்து ஒன்பது மாதங்களுக்கு மேலாகிறது. ஆறு மாதங்களுக்குப் பின்பு, தாலூகா அலுவலகத்தில், அதற்குரிய எழுத்தரிடம் சென்று விசாரிக்கும்போது, நாங்கள் கொடுத்த மனு எந்த நிலையிலிருக்கிறது என்றுகூட அவர் கூற மறுத்ததுடன், "உங்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டால், அப்புறம் எம். எல். ஏ. - க்களும் மற்ற மற்ற அரசியல் பெரிய மனிதர்களும் சிபார்சு செய்பவர்களுக்கு எங்கிருந்து கொடுப்பது" என்றார்.

தொடர்ந்து, இது தொடர்பான அதிகாரிகளை நாங்கள் சந்தித்து விவரம் தெரிந்துகொள்ள விரும்பியபோது, அவர்களும் பட்டும் படாமலும் தங்களுக்கு ஏற்படுகிற அரசியல் பெரிய மனிதர்களது நெருக்கடிகளைப் பற்றி மட்டிலும் குறிப்பிட்டார்கள்.

எதுவும் செய்ய முடியாத நிலையில், நாங்கள் அரசியல் பெரிய மனிதர்கள் சிலரை அணுகியபோது அரசாங்கத்தின் நிலத்துக்கு விலைப் பேரம் பேசுவது கண்டு அதிர்ச்சிக்குள்ளானோம்.

அத்துடன் நாங்கள் விசாரித்துத் தெரிந்துகொண்ட வகையில், நிலமில்லாதோருக்கு மட்டுமே நிலம் வழங்கப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கைக்குப் புறம்பாக நிலம் படைத்த பல பிரபுக்கள் தங்கள் தங்கள் உறவினர்கள் பேராலும், நண்பர்கள் பேராலும் பெரிய மனிதர்களது சிபார்சுகளைப் பிடித்துப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதறிந்து வேதனையடைகிறோம்.

ஏழையர்க்கு நிலம் வழங்கும் விஷயத்தில் அதிகாரிகளிடம், சட்ட மன்ற, மேல் மன்ற உறுப்பினர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்கள் சிபார்சு செய்பவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்றும் நிர்ப்பந்திப்பதாகவும் அறிந்து கொண்டோம். வீட்டு மனைகள் விஷயத்திலும் இப்படித்தான் என்று தெரிகிறது.

நிலப் பட்டா வழங்குவது தொடர்பான விஷயத்தில் அரசியல் தலையீடுகள் இருக்கும் வரையில் என் போன்ற ஏழைகள் என்றென்றும் ஏமாளிகளாகவே இருக்க வேண்டியதுதான்.

"ஊரார் ஆட்சேபனை" என்ற பொருள் பொதிந்த சொல்லை, அதிகாரிகள் பயன்படுத்தித் தப்பித்துக் கொள்கிறார்கள். அரசுக்குச் சொந்தமான நிலத்தை, அரசு, நிலமில்லாதோருக்குக் கொடுப்பதில் "ஊர் ஆட்சேபனை" என்பது, எந்தப் பொருளில் கூறப்படுகிறதோ, அல்லது இந்த ஆட்சேபனை, அவசியந்தானோ என்னவோ?

காங்கிரசார் வகுத்திருந்த விதிமுறைகளின் கீழேயே, நிலப் பட்டா விஷயத்தில் கழக அரசும் செயல்படுவதாலேயே இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன.

இந்த நிலைமைகள் மாறி, என் போன்ற குடும்பப் பொறுப்பு மிக்க உண்மையான ஏழை, எளியவர்களுக்கு நிலம் கிடைக்கும் காலம் ஒன்று வருமா? அரசியல் வாதிகள் அந்த நிலைமைக்கு வழிவிடுவார்களா?

இப்படிக்கு,
எம். கே மதிவாணன்
பரந்தூர்.

• • •

'காஞ்சி' ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா, நான் ஒரு ஓட்டல் உரிமையாளன். காஞ்சிபுரம் செட்டித் தெருவில் இப்போதுதான் புதிதாகத் தொடங்கி நடத்தி வருகிறேன். இப்போது எனது கடை இருக்கும் இடத்தில் எனக்கு முன்பு வேறு மூவர், கடையினை நடத்திக்கொண்டிருந்துவிட்டு, காலி செய்து கொண்டுப்போய்விட்டனர். நான் கட்டிடத்தின் உரிமையாளரிடமே நேரில் இடம் கேட்டுப் பெற்று, கடை நடத்தி வருகிறேன்.

எனக்கு முன்பு அல்லது, அதற்கும் முன்பு கடை நடத்திய யாரோ ஒருவர், விற்பனைவரி பாக்கி வைத்து விட்டுச் சென்று விட்டாராம்! அதற்காக, அந்த பாக்கியை நானே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று என்னை நிர்ப்பந்திக்கிறார்கள். எனது விற்பனை அனுமதிக்காக, நான் விற்பனை வரி அலுவலகம் சென்று, லைசென்ஸ் பெற உரிய தொகை தரும்போது, பழைய கடைக்காரரின் பாக்கியைப் பைசல் செய்ய வேண்டும். அல்லது நானே தருவதாக ஒப்புக் கொள்ளவாவது வேண்டும்; அப்போதுதான் விற்பனை உரிமை லைசென்ஸ் வழங்க முடியும் என்றும் கூறுகிறார்கள்.

எனக்கும், வரிப் பாக்கி வைத்துச் சென்றவருக்கும் எந்தவித தொடர்புமில்லையென்றும், அந்த நபரிடமிருந்துகூட கடையை நான் நேரில் பெறவில்லை யென்றும் எவ்வளவோ எடுத்துக் கூறியும், சமாதானங்களை ஏற்க மறுத்து, எந்தக் கட்டிடத்தில், வரிப் பாக்கியுள்ளதோ, அதுதான் எங்கட்கு முக்கியம் என்றும், பாக்கி வைத்திருப்பவர் யார் என்ற கவலை தங்கட்கு இல்லையென்றும் கூறி, அந்தக் கட்டிடத்தில் நான் கடை வைத்திருப்பதால், நானே அந்த வரிப் பாக்கிக்குக் கடமைப்பட்டவன் என்றும் கூறுகிறார்கள்.

யாரோ ஒருவர் வைத்துச் சென்ற வரிப் பாக்கியை, எந்த வகையிலும் தொடர்பில்லாத நான் கட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பது என்ன நியாயம்? என்ன சட்டம்? என்பதும் புலனாகவில்லை. நான் தொடர்ந்து கடையை நடத்துவதா? வைத்த முதல் நட்டமடையும்படி எடுத்து விடுவதா? தொடர்புடையவர்கள் நீதி வழங்குவார்களா?

நரசிம்மன்,
காஞ்சிபுரம்.

# நிலாவில் இறங்குவதற்கு ஆயத்தம்

இரண்டாவது நிலாவுலகப் பயணத்துக்கு அமெரிக்கா தயாராகிறது. ஆயத்தங்கள் மிகசுறு சுறுப்பாக நடைபெற்று வருகின்றன. விண்வெளி விமானிகளும் தொழில் நுட்பசாலிகளும் பயணத்துக்கு முன் செய்யவேண்டிய கடைசி ஒத்திகைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

அம்புலியில் விண்வெளி விமானிகள் அடியெடுத்து வைக்கவேண்டும். பின்னர் அவர்களை பத்திரமாக பூமிக்குத் திரும்பிக்கொணர வேண்டும் இதுதான். சென்ற ஜூலை மாதம் நிகழ்ந்த அப்பாலோ–11 அம்புலிப் பயணத்தின் முக்கிய இலட்சியம். அம்புலி தோன்றிய விதம், அதன் வளர்ச்சி தற்கால நிலை ஆகியவற்றை எவ்வளவு அறிய முடியுமோ அவ்வளவும் அறிய வேண்டும். இதுதரன் அப்பாலோ 12–ன் இலட்சியம்.

அப்பாலோ 12 அம்புலிப் பயணம் பூமியிலிருந்து நவம்பர் 14–ம் தேதி தொடங்குகிறது. அம்புலி கப்பலில் சார்ல்ஸ் கான்ராடு. ரிச்சர்டு கார்டன், ஆலன்பீன் ஆகியோர் பயணம் செய்வர். இன்ட்ரப்பிட் என்ற நிலாவாகனத்தில் விண்வெளி விமானிகள் கான்ராடு, பீன் ஆகிய இருவரும் பயணம் செய்து அம்புலியில் நவம்பர் 19–ம் தேதி இறங்குவர். அமெரிக்காவின் பழைய சர்வேயர் டெலிவிஷன் கோள் இருந்து வரும் இடத்துக்கு நடந்து செல்லக்கூடிய வகையில் அவ்வளவு அருகில் இருக்கும் ஓரிடத்தில் இவர்கள் இறங்குவர். அம்புலியில் புயல் கடல் என்று கூறப்படும் இடத்தில்தான் சர்வேயர்கோள் இருக்கிறது. "யாங்கி கிளிப்பர்" என்றதாய்க் கப்பலில் விண்வெளி விமானி கார்டன் மட்டும்தான் இருப்பார். தமதுசகாக்கள் இருவரும் அம்புலியில் ஒன்றரை நாள் தங்கியிருக்கையில் கார்டன் அம்புலியை வட்டமிட்டுக் கொண்டிருப்பார்.

விண்வெளி விமானிகள் ஹூஸ்ட்டன் நகரில் இருக்கும் தம் குடும்பத்தினர்களுடன் வார கடைசியில் தங்கியிருந்துவிட்டு சென்ற திங்கட்கிழமை திரும்பி வந்தனர். உடனே அவர்களுக்கு 11 நாள் இறுதிப் பயிற்சித் தொடங்கியது. அவர்கள் இதில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கின்றனர். அம்புலிப் பயணம் முடிந்து திரும்பி வந்த பின்னர், இவர்கள் தனியாக குவாரன்டைனில் இருப்பர். அது டிசம்பரில்தான் முடியும். அதன் பின்னர்தான் அவர்கள் தம் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியும்.

கான்ராடு, பீன் ஆகிய இருவரும் இப்பொழுது செயற்கை சூழ்நிலையில் அம்புலியில் இறங்கும் பணிகளில் பழகி வருகின்றனர். இவர்கள் இதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். விண் வெளி விமானி கார்டன் யாங்கி கிளிப்பர் போன்று இருக்கும் விண்வெளிக் கப்பல் ஒன்றில் ஒத்திகை நடத்தி வருகிறார்.

பூமியிலிருந்து கிளம்பி பெருங்கடலில் வந்து குதிக்கும் வரை பத்து நாள் பயணத்தில் அவர்கள் செய்ய வேண்டிய பணிகள் அனைத்துக்கும் கிளம்புவதற்கு முன் ஒத்திகைகள் நடக்கும்.

"மிக அதிகபட்ச விஞ்ஞான அறிவு" பெறுவதுதான் அப்பாலோ 12-ன் நோக்கம் என்று கூறுகிறார் தலைமை விமானி கான்ராடு. அம்புலித் தரையில் நிலா வாகனத்துக்கு வெளியே, விஞ்ஞான இலட்சியத்துக்குரிய பணிகள் அனைத்தையும் செய்வதற்காக சிறந்த வாய்ப்பு, மூன்றும் சர்வேயர் கோள் நிற்கும் குழியிலிருந்து 1120 அடிக்குள் துல்லியமாகத் தாம் இறங்குவதைப்பொறுத்திருக்கிறது என்கிறார் கான்ராடு.

கான்ராடு, ஆலன் பீன் ஆகிய இருவரும் ஆராயவிருக்கும் நிலாத் தரைப் பகுதி அப்பாலோ 11 இறங்கிய அமைதிக் கடல் பகுதிக்கு 870 மைல் மேற்கே இருக்கிறது. இது சற்று கரடு முரடான தரையாகும்.

இரண்டு தடவை அம்புலித் தரையில் உலா நடத்துவதும், ஆறு விஞ்ஞானக் கருவிகளை அம்புலியில் அமைப்பதும் அப்பாலோ 12 வீரர்களின் விஞ்ஞானத் திட்டமாகும். ஒவ்வொரு உலாவுக்கும் 3-50 மணி நேரம் பிடிக்கும். அப்போலோ 11-ல் ஒரே ஒரு உலா தான் நடந்தது. அதுவும் இரண்டரை மணி நேரம்தான் நடந்தது. மூன்று விஞ்ஞானக் கருவிகளைத்தான் அம்புலித் தரையில் அப்பாலோ 11 விமானிகள் அமைத்தனர்.

அப்பாலோ 12 பயண நெறியாளர் செஸ்ட்டர் எம். லீ. அம்புலியில் கான்ராடு, ஆலன் பீன் ஆகிய இருவரும் துல்லியமாகக் குறித்த இடத்தில் இறங்கும் வாய்ப்புச் செம்மையாக இருக்கிறது என்கிறார்.

"சென்ற ஜூலை மாதம் அப்பாலோ 11-ல் அம்புலியில் இறங்கும்போது ஏற்பட்ட பிரச்னைகள் நாம் அறிவோம். அம்புலியில் இறங்கும் முறைகள் இப்பொழுது செம்மையாக்கப்பட்டு உள்ளன. அப்பாலோ 12 விமானிகள் சாளரம் வழியாக வெளியே முன்னரே பார்க்கவேண்டும். முன்னரே அவர்கள் வாகனத்தை இயக்கத் தொடங்க வேண்டும். இறங்கும் இடத்தை நன்குகப் பார்க்கக்கூடிய முறையில் தாழ்வாகப் பறக்கவேண்டும்" என்கிறார் லீ,

அமெரிக்காவின் அப்பாலோ 12-விமானிகள் அம்புலியில் தாம் செய்யும் பணிகளை வண்ண டெலிவிஷனில் அஞ்சல் செய்வர்.

வண்ண டெலிவிஷன் காமரா புதன்கிழமையன்று, ஸாட்டர்ன் ஏவுகணையின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும் அப்பாலோ 12 நிலா வாகனத்தில் வைத்துச் சோதிக்கப் பெற்றது. சோதனையில் அது தேறிவிட்டது. வண்ண சோதனைச் சக்கரம் அட்லாண்டிக் பெருங்கடல், இன்னும் பிற பொருள்களின் வண்ணப் படங்களை அது அஞ்சல் செய்தது. டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹூஸ்ட்டன் நகரில் இருக்கும் அப்பாலோ பயண நிலையத்தில் உள்ள ஒரு ரிசீவர் இந்தப் படங்களைப் பெற்றுக்கொண்டது.

"படங்கள் தெளிவாகவும் அழகாகவும் இருந்தன." என்றார் நாஸா என்ற அமெரிக்க விண் வெளி நிலையத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி.

சோதனையை மிக உன்னிப்பாக மதிப்பிட்ட பின்னரே காமராவைப் பயன்படுத்த நாஸா ஒப்புதல் தந்தது. முந்திய சோதனைகளில் காமராவில் சில கோளாறுகள் ஏற்பட்டன. தயாரிப்பாளருக்கு அது திருப்பி அனுப்பப்பட்டது. பழுது பார்க்கப் பெற்று திங்கட்கிழமை அது திரும்பி வந்தது.

அப்பாலோத் திட்ட அதிகாரிகள் வண்ண டெலிவிஷன் படங்களைத்தான் விரும்புகின்றனர். ஏனெனில் அம்புலி உண்மையான வண்ணத்திலே படம் பிடிக்கப்படும். படங்கள் சிறப்பாகவுமிருக்கும்.

நன்றி: 'தினமணி'

# பண்பாடு

—மலையமான்—

உலகிலே மிக உயர்ந்த பண்பாடு நம் தமிழ்ப் பண்பாடு. அது பற்பல காரணங்களால் நடுநடுவே சீரழிக்கப்பட்டு வருகிறது. எது நல்லது எது தீயது என்று அறிந்து வைத்திருந்தும் தீயதையே நல்லது என்று வாதிடும் உலகம் இன்றைய உலகம்! இதில் பண்பாட்டினைப் பற்றிய பேச்சு வேடிக்கைப் பேச்சாகக்கூட இருக்கும். அதுவும் குறிப்பாக நம் தமிழ்ப் பண்பாடு பற்றி அறிந்தால் இன்றைய உலகு என்ன எண்ணுமோ?

எல்லோரும் வரயிருக்கிற தேர்தலைப் பற்றிப் பேசியபோது அறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கத்திலே நடைபெற்ற மாநாட்டில், "தமிழை—தமிழ்ப் பண்பாட்டை—தமிழ் நாகரிகத்தை—தமிழ்க் கலையை உலகறியச் செய்யவேண்டும். உலகறியச் செய்வதோடு மட்டுமல்ல; அவைகளை உணர்ந்து பின்பற்றுமாறும் செய்யவேண்டும், அதுவே நம்முடைய வருங்கால வேலைத் திட்டம்!" என்று அறிவுறுத்தினார்கள். உலகறியச் செய்வது இருக்கட்டும்; இன்றைய தமிழகத்துக்கே நாம் நம் பண்பாட்டை விளக்க வேண்டிய நிலைமைகள் வளர்ந்து வருகின்றன. இந்த நேரத்தில் நம் தமிழ் நூலொன்றில் வரும் காட்சியைக் காணுதல் பொருத்தமுடையதாயிருக்கும்.

ஒரு தலைவனும் தலைவியும் ஒருவர் உள்ளத்தில ஒருவர் மாறி மாறிப் புகுந்து இடங்கொண்டனர். தலைவனுக்கும் தலைவிக்கும் வீட்டிலுள்ளவர்கள், மேலே தொடர இடந்தரவில்லை. தலைவியை அவனுடைய பெற்றோர்கள் இல்லத்திலேயே வைத்துச் செறித்துவிட்டார்கள். தலைவனைச் சந்திப்பதற்கும் இடந்தராத வீடு தலைவிக்குச் சிறையாக ஆயிற்று. தலைவனுக்கும் தலைவியைக் காணாத கணம் ஒரு யுகமாயிற்று. எப்படியோ ஒருவரை ஒருவர் சந்தித்து யாருமறியாமல் புறப்பட்டு வெளியூர் சென்று தம் வாழ்வைத் தொடங்கலாம் என்று திட்டமிட்டுப் புறப்பட்டும் போய்விட்டனர்.

தலைவியைக் காணவில்லை என்று தாய் தேடும்போது தலைவனையும் காணவில்லை என்ற செய்தி கிடைக்கிறது. எங்கெங்கு சென்றிருக்க முடியுமோ அங்கெல்லாம் தேடியலைகிறார்கள். தலைவியை எடுத்து வளர்த்த செவிலி காடு மலைகளிலெல்லாம் அலைந்து தன்னை எதிர்ப்பட்டவரை எல்லாம் கேட்கிறாள். அப்படி அவள் அலைந்து தேடிவரும்போது கண்ணுக் கெட்டிய தொலைவில் தன் மகளைப் போலவும் தன் மகளோடு உறவு பூண்டவனைப் போலவும் இருவர் வரக் கண்டு மகிழ்கிறாள். அலைந்து பழுதடைந்த அவள் கண்ணுக்கு அவர்கள் இருவரும் தன் மகளும் மருமகனுமாகவே இருப்பார்கள் என்று தோன்றிற்று. ஆனால் அவர்கள் தன் மகளைப் போலவும் மருமகனைப் போலவும் உறவு கொண்டவர்கள்—வெளியூர்க்காரர்கள் என்பது பிறகுதான் தெரிந்தது. அவர்கள் தன்னை நெருங்கி வந்தவுடன் கேட்கிறாள்!

"தொலைவிலே வரும்போது நீங்கள் இருவரும் என்னுடைய மகளும் அவளோடு தொடர்புகொண்ட அவள் தலைவனும்தான் என்று நினைத்தேன். திரும்ப வந்துவிட்டார்கள் என்றும் எண்ணி மகிழ்ந்தேன். உங்களை அருகிலே பார்த்ததும் ஏமாந்து போனேன். சரி; உங்களைப் போலவே உறவுகொண்ட இருவர் உங்கள் எதிரே செல்கிறார்களா? நீங்கள் பார்த்தீர்களா?"

தலைவியின் செவிலி கேட்ட இந்தக் கேள்விக்கு எதிரே வந்த அந்தத் தலைவன் பதில் சொல்கிறான். அதிலேதான் நாம் விளக்கவும் எடுத்துக் காட்டவும் உலகறிந்து பின்பற்றவும் ஆன ஒப்பரிய தமிழ்ப் பண்பாடு மிளிர்வதைக் காண்கிறோம். அவன் நேரடியாக அந்தச் செவிலியிடம்கூட முழு பதிலையும் சொல்லிவிடவில்லை. அவனே பேசுகிறான் கேளுங்கள்:

"வரும்போது இந்த மலையிலே ஆளியைப் போலும் வன்மையுடைய ஒரு ஆண் மகனைக் கண்டேன்; பிறகு—தூண்டா விளக்கனையாய்! இந்த அம்மா சொல்கிறார்களே அது என்ன?"

"தூண்டா விளக்கனையாய்!"—என்று தன்னுடன் வந்த தன் துணைவியை அழைத்து "அப்புறம் என்னவோ சொல்கிறார்களே அது என்ன?" என்கிறான். அதாவது—"நான் ஒரு ஆண் மகனைத்தான் பார்த்தேன், பெண்ணைப் பார்க்கவில்லை. நீ அந்தப் பெண்ணைப் பார்த்தாயா?"—என்று கேட்கிறான்.

அதற்கு அவள், நான் மயில் போலும் சாயலை உடைய ஒரு பெண்ணைத்தான் பார்த்தேன் நீங்கள் சொல்வதுதான் எனக்கு விளங்கவில்லை"—என்றாள்.

செவிலிக்குப் பதில் கிடைத்துவிட்டது. அதை ஒரு புறம் வைப்போம்.

இதே கேள்வியை இன்றைய உலகில் ஒருவர் கேட்பதாக எண்ணிக் கொள்வோம். பதில் எப்படியிருக்கும்? தலைவன் சொன்னதைத் தலைவி சொல்வாள். தலைவி சொல்வதைத் தலைவன் சொல்வான். அங்கேயே நம்முடைய பண்பாடு எவ்விதம் தலைகீழாகப் புரண்டிருக்கிறது என்பதை நாம் அறியலாம்.

கீழ்மேலாகப் புரண்டுவரும் நம் தமிழ்ப் பண்பாட்டைச் சரிசெய்து நிலைநாட்ட நம் தமிழிலக்கியங்களையும் அறநூல்களையும் தவிர வேறு வழியில்லை. அவைகளைக் கற்றுணர்வதிலே உலகு ஆர்வம் காட்டும் நாள் உதித்தாகவேண்டும்—உதிக்கச் செய்யவேண்டும்!

—நூல்: திருக்கோவையார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

டாற்றியவர். அறுவை மருத்துவத்துறையில் புகழ் பெற்ற வல்லுநர் என்ற பெருமைக்குரியவர். சென்னை மாநகராட்சி மன்ற மேயராகவும், சென்னையின் செரீபாகவுமிருந்து சிறப்புத் தேடித்தந்ததுடன், அண்ணாமலைப் பல்கலை கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றி இருக்கிறார். 1954 முதல் 1958 வரையில் சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்று மருத்துவத்துறைக்குப் புகழ் குவித்தவர் ஆவார். செரியன். இறுதியாக 1964-ல் மராட்டிய மண்டிலத்தின் கவர்னராக நியமிக்கப் பெற்றார். தாம் வகித்த அனைத்துப் பொறுப்புக்களுக்கும் தம் அறிவாற்றல் கொண்டு பெருமை தேடிய திரு. செரியன் மறைவு, உண்மையிலேயே துயரந்தரக் கூடியதுதான். செரியன் அவர்களது குடும்பத்துக்கு நம் இதயார்த்தமான இரங்கலைப் படைத்துக்கொள்கிறோம்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம் திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது